compose.kerala.gov.in
egazette.kerala.gov.in
printing.kerala.gov.in

Regn.No. KERBIL/2012/45073
dated 2012-09-05 with RNI
Reg No.KL/TV(N)/634/2021-2023

കേരള സർക്കാർ
GOVERNMENT OF KERALA

കേരള ഗസറ്റ്
KERALA GAZETTE

ആധികാരികമായി പ്രസിദ്ധപ്പെടുത്തുന്നത്
PUBLISHED BY AUTHORITY

ചൊവ്വ, 2026 ജൂൺ 09
Tuesday, 09th June 2026

1201 ഇടവം 26
26th Idavam 1201

1948 ജ്യേഷ്ഠം 19
19th Jyaishta 1948

വാല്യം 15
Vol. XV

നമ്പർ **23**
No.

Part I -Section (iii)

Law Department

©
കേരള സർക്കാർ
GOVERNMENT OF KERALA
2026

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் - எஃப்) துறை

அறிக்கை

எண்:130/ச.இ.எப்1/2025/சட்டம். திருவனந்தபுரம், 2026 மார்ச் 9

1201 கும்பம் 25

1947 பால்குனம் 18

கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

கெ.ஜி.சனல் குமார்,
சட்டச் செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2026-ன் 4-வது சட்டம்

2026-ன் கேரள வழக்கறிஞர்களின் எழுத்தர்கள் நலநிதி (திருத்த) சட்டம்

2003-ன் கேரள வழக்கறிஞர்கள் எழுத்தர்கள் நலநிதி
சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்குரிய

ஒரு

சட்டம்

முன்னுரை.- 2003-ன் கேரள வழக்கறிஞர்களின் எழுத்தர்கள் நலநிதி சட்டம் (2003-ன் 27) பின்வரும் தேவைகளுக்காக மீண்டும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதாலும்:-

இந்திய குடியரசின் எழுபத்து ஏழாம் ஆண்டில் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:-

1. சுருக்கத்தலைப்பு மற்றும் தொடக்கம்.- (1) இந்த சட்டம் 2026-ன் கேரள வழக்கறிஞர்களின் எழுத்தர்கள் நலநிதி (திருத்த) சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது உடன் அமலுக்கு வருவதாகும்.

2. பிரிவு 14-ன் திருத்தம்.- 2003-ன் கேரள வழக்கறிஞர்களின் எழுத்தர்கள் நலநிதி சட்டத்தின் (2003-ன் 27) (இதற்குப் பிறகு முதன்மைச்சட்டம் என்று குறிப்பிடப்படும்) பிரிவு 14-ன் துணைப்பிரிவு (1)-ல் ''பன்னிரண்டு ரூபாய் மதிப்புள்ள'' என்ற சொற்களுக்கு பதிலாக ''இருபது ரூபாய் மதிப்புள்ள'' என்ற சொற்கள் சேர்க்க வேண்டும்.

3. பிரிவு 17-ன் திருத்தம்.- முதன்மைச் சட்டத்தின் பிரிவு 17-ல்,-

(i) துணைப்பிரிவு (1)-ல் ''மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு வழக்கறிஞரின் எழுத்தரும்'' என்ற சொற்களுக்கு முன்பாக ''விண்ணப்ப தேதியில் ஐம்பது வயது நிறைவடையாத'' என்ற சொற்கள் சேர்க்க வேண்டும்.

(ii) துணைப்பிரிவு (5)-ல் ''ஆயிரத்து இருநூறு ரூபாய்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''இரண்டாயிரம் ரூபாய்'' என்ற சொற்களும் ''மூன்று சம தவணைகளாக'' என்ற சொற்களுக்கு பதிலாக ''முழுத் தொகையும் அறுநூறு ரூபாய்க்கு குறையாத மூன்று தவணைகளாக'' என்ற சொற்களும் சேர்க்க வேண்டும்.

4. பிரிவு 18-ன் திருத்தம்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 18-ல்,-

(i) துணைப்பிரிவு (1)-ல் ''சேர்த்து வைத்த தொகையும்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''ஒரு சேர்த்து வைத்த தொகை'' என்ற சொற்கள் சேர்க்க வேண்டும்;

(ii) துணைப்பிரிவு (4)-ல் ''பணம்'' என்ற சொல்லுக்கு பதிலாக ''சேர்த்த வைத்த தொகை'' என்ற சொற்கள் சேர்க்க வேண்டும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(iii) தற்போதுள்ள துணைப்பிரிவு (7)-க்கு பதிலாக பின்வரும் துணைப்பிரிவுகள் சேர்க்க வேண்டும், அதாவது.-

''(7) பணி முடிவடையும்போது அறுபது வயதும் வழக்கறிஞர்களின் எழுத்தர்கள் நலநிதியில் எட்டு ஆண்டுகள் உறுப்பினராக இருந்த உறுப்பினர்களுக்கு நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய விகிதங்களில் நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராவார்கள்:

எனில், துணைப்பிரிவு (7)-ல் என்னதான் அடங்கியிருந்தாலும், 2026-ன் கேரள வழக்கறிஞர்களின் எழுத்தர்கள் நலநிதி (திருத்த) சட்டம் (2026-ன் 4) அமலுக்கு வருவதற்கு முன் முதன்மைச் சட்டத்தின் படியோ அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் படியோ ஓய்வூதியம் பெற்று வந்த உறுப்பினர்களுக்கு மேற்கூறிய விதிமுறை பொருந்தாததும் அவர்களுக்கு அரசு காலாகாலங்களாக நிர்ணயிக்கப்படக்கூடிய ஓய்வூதிய உயர்வுக்கும் தகுதியுடையராவதுமாகும்.

(8) துணைப்பிரிவு (7)-ன் விதிகளின் படி ஓய்வூதியம் பெறும் உறுப்பினர் ஒருவர் இறந்தால் மேற்குறிப்பிட்ட உறுப்பினரின் சார்புடையவருக்கு நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய விகிதங்களில் நிதியிலிருந்து குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவராவர்.

(9) எட்டு ஆண்டுகள் உறுப்பினராக நிறைவு செய்துள்ளவரும் எனில் அறுபது வயது நிறைவடைவதற்கு முன்பே இறக்கும் ஒரு உறுப்பினரின் சார்புடையவர்களுக்கு நிர்ணயிக்கப்பட கூடிய அத்தகைய விகிதங்களில் நிதியிலிருந்து குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவராவர்:

எனில், துணைப்பிரிவு (8), (9) ஆகிய துணைப்பிரிவுகளில் என்னதான் அடங்கியிருந்தாலும் 2026-ன் கேரள வழக்கறிஞர்களின் எழுத்தர்கள் நலநிதி (திருத்த) சட்டம் (2026-ன் 4) அமலுக்கு வருவதற்கு முன் முதன்மை சட்டத்தின் படியோ அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் படியோ குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் சார்புடையவர்களுக்கு மேற்கூறிய துணைப்பிரிவுகளின் நிபந்தனைகள் பொருந்தாததும் அவர்களுக்கு அரசு காலகாலங்களாக நிர்ணயிக்கப்படும் படியான குடும்ப ஓய்வூதிய உயர்வுக்கும் தகுதியுடையவராவதுமாகும்.

(10) வேலையிலிருந்து நின்று ஓய்வூதியமும் பிற சலுகைகளும் பெற்ற ஒரு உறுப்பினருக்கு நிதியில் மீண்டும் சேர்வதற்குத் தகுதியற்றவராவர்.''.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் - சி) துறை

அறிக்கை

எண்:60/ச.இ.சி3/2025/சட்டம். திருவனந்தபுரம், 2025 அக்டோபர் 28

1201 துலாம் 11

1947 கார்த்திகம் 6

கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2025-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

கெ.ஜி.சனல் குமார்,
சட்டச் செயலாளர்.

1

2

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/
File No. PTGD/1547/2026-F2 (Computer No. 322697)

2025-ன் 8-வது சட்டம்

2025-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி செஸ் (திருத்த) சட்டம்

2008-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி செஸ்

சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்குரிய

ஒரு

சட்டம்

முன்னுரை.- 2008-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி செஸ் சட்டம் பின்வரும் தேவைகளுக்காக திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதாலும்:-

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:-

1. சுருக்கத் தலைப்பு மற்றும் தொடக்கம்.- (1) இந்த சட்டம் 2025-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி செஸ் (திருத்த) சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது உடன் அமலுக்கு வருவதாகும்.

2. பிரிவு 2-ல் திருத்தம்.- 2008-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி செஸ் சட்டம் (2008-ன் 20) (இதற்குப் பிறகு முதன்மைச்சட்டம் என்று குறிப்பிடப்படும்) பிரிவு 2-ல்,-

(i) தற்போதுள்ள உட்பிரிவு (எ) உட்பிரிவு (எஎ) ஆக மறு எழுத்திடப்பட வேண்டியதும் அவ்வாறு மறு எழுத்திடப்பட்ட உட்பிரிவு (எஎ)க்கு முன்பாக பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதுமாகும், அதாவது;-

''(எ) ''மேல்முறையீட்டு அதிகாரி'' எனில் பிரிவு-12-ன் படியான மேல்முறையீட்டு அதிகாரி என்று பொருள்படும்.'';

(ii) உட்பிரிவு (டி)-க்கு பிறகு பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

''(டிஎ) கோம்பவுண்டிங் ஆபிஸர்'' எனில் பிரிவு 16டி-ன் படி அரசு நியமிக்கும் ஒரு அலுவலர் என பொருள்படும்.''.

3. பிரிவு 16-ல் திருத்தம் .- முதன்மை சட்டத்தின் பிரிவு 16-ல்,-

(i) துணைப்பிரிவு (1)-ல், ''ஆறு மாத காலம் வரையிலான சிறை தண்டனை அல்லது ஐயாயிரம் ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இவை இரண்டும் சேர்ந்ததோ ஆன தண்டனை வழங்கப்பட வேண்டியதாகும்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''இருபத்து ஐயாயிரம் ரூபாய் அபராதம் தண்டனையாக வழங்கப்பட வேண்டியதாகும்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/
File No. PTGD/1547/2026-F2 (Computer No. 322697)

(ii) துணைப்பிரிவு (2)-ல், ''ஆறுமாத காலம் வரையிலான சிறைதண்டனை அல்லது ஐயாயிரம் ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இரண்டையும் சேர்த்து தண்டனை வழங்கப்பட வேண்டியதாகும் என்ற சொற்களுக்கு பதிலாக ''இருபத்தையாயிரம் ரூபாய்'' அபராதம் தண்டனையாக வழங்கப்பட வேண்டியதாகும்.''.

(iii) துணைப்பிரிவு (3)-ல், ''மூன்று மாத காலம் வரையிலான சிறைதண்டனை அல்லது இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இரண்டையும் சேர்த்து தண்டனை வழங்கப்பட வேண்டியதாகும்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''இருபத்தையாயிரம் ரூபாய் அபராதம் தண்டனையாக வழங்கப்பட வேண்டியதாகும்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(iv) துணைப்பிரிவு (4) தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

4. பிரிவு-16-க்கு பிறகு புதிய பிரிவுகள் சேர்த்தல்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 16-க்கு பிறகு பின்வரும் பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டியதாகும். அதாவது.-

''16 எ. அபராதம் விதிப்பதற்கு முன்னர் வாய்ப்பு வழங்கப்படும்.- இந்த சட்டத்தில் என்னதான் அடங்கியிருந்தாலும், பிரிவு 16-ன் கீழான அபராதத்தை விதிக்க அரசிற்கு, அரசிதழ் அறிக்கை வாயிலாக, தொழில்/கயிறு துறையிலுள்ள இணை இயக்குநர் பதவிக்கு இணையான ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டியதும், அவர் அபராதம் விதிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்பாக மேற்குறிப்பிட்ட துறையின் விதிமுறைகளை பின்பற்ற வியாபாரிக்கு தொண்ணூறு நாட்களுக்கு மிகாத ஒரு காலக்கெடுவை எழுத்துபூர்வமாக நிர்ணயித்து வழங்க வேண்டியதும், மேற்குறிப்பிட்ட காலவரம்பிற்குள் வியாபாரி மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்றியிருந்தால் வியாபாரிக்கு எதிராக அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் தொடங்க கூடாததுமாகும்.

16 பி. அபராதம் செலுத்த தவறும் பட்சம் அதற்கான தண்டனை.- (1) பிரிவு 16-ன் படி அபராதம் விதிக்கப்பட்டுள்ள உத்தரவின் நகலை பெற்ற தேதி முதல் தொண்ணூறு நாட்களுக்குள் அபராதம் செலுத்த தவறும் எந்தவொரு நபரும் ஆறுமாதம் வரையிலான சிறை தண்டனை மற்றும் அபராத தொகையின் இரு மடங்கு அபராதமும் விதிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியதாகும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றமும், முதல் நிலை, மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்கு கீழுள்ள எந்தவொரு நீதிமன்றமும் விசாரிக்கப்படக்கூடாது.

(3) துணைப்பிரிவு (1)-ன் படி தண்டிக்கப்படக் கூடிய ஒரு குற்றமும், அபராதம் விதிக்க அதிகாரப்படுத்தப்பட்டுள்ள அதிகாரியின் முன் அனுமதியுடனும் அவ்வாறான குற்றங்களுக்கு காரணமான அவரது எழுத்துபூர்வ அறிக்கையின் அடிப்படையின்றி எந்த ஒரு நீதிமன்றமும் விசாரிக்கப்படக்கூடாது.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/
File No. PTGD/1547/2026-P2 (Computer No. 322697)

16 சி. அபராதம் விதிப்பதற்கான அதிகாரியின் அதிகாரம்.- (1) இந்த சட்டத்தில் பிரிவு-16-ன் படியான அபராதத்தை விதிப்பதற்காக பிரிவு 16 ஏ-ன் படி அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரி நிர்ணயிக்கப்பட்ட முறையில் ஒரு விசாரணை நடத்திய பிறகு, இந்த சட்டத்தின்படியான அபராதத்தை விதிக்க வேண்டியதாகும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படியான விசாரணையை மேற்கொள்ளும்போது, அதிகாரிக்கு, விஷயத்தின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து நேரடி அறிவுள்ள எந்தவொரு நபரையும் சாட்சி அளிப்பதற்காகவோ அதிகாரியின் கருத்தில் விசாரணை தொடர்பான விஷயத்திற்கு பயனுள்ளதாகவோ தொடர்புடையதாகவோ உள்ள, ஏதேனும் ஆவணம் சமர்ப்பிப்பதற்காக வரவழைக்கவும், ஆஜராக கட்டாயப்படுத்தவும் அதிகாரம் உள்ளதும் அத்தகைய விசாரணையில் அந்த நபர் குற்றம் செய்துள்ளார் என உணரும்பட்சம், அவர் இந்த சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான ஒரு அபராதத்தை விதிக்க வேண்டும்.

(3) துணைப்பிரிவு (2)-ன் படி அதிகாரியால் வெளியிடப்பட்ட உத்தரவில் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும், அத்தகைய உத்தரவு அவருக்கு தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் மேல்முறையீட்டு அதிகாரியின் முன், பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் அத்தகைய கட்டணத்திலும், ஒரு மேல்முறையீடு வழங்கலாம்.

ஆனால், உரிய நேரத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ய போதுமான காரணத்தால் மேல்முறையீட்டாளர் தடுக்கப்பட்டிருந்தார் என்று மேல்முறையீட்டு அதிகாரி உணரும் பட்சம், நிர்ணயிக்க காலமான முப்பது நாட்களான காலாவரம்பு முடிந்த பிறகு மேல்முறையீட்டு அதிகாரி ஏற்றுக்கொள்ளலாம்.

(4) மேல்முறையீட்டு அதிகாரிக்கு மேல்முறையீட்டில் உள்ள தரப்பினரின் கருத்தை கூறுவதற்கான ஒரு வாய்ப்பை வழங்கிய பின்னர், மேல்முறையீடு பெற்ற தேதி முதல் அறுபது நாட்களுக்குள், எந்த உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது அந்த உத்தரவை உறுதி செய்யவோ மாற்றியமைக்க செய்யவோ ரத்து செய்யவோ செய்வது உகந்தது என அவர் கருதும் அத்தகைய உத்தரவு பிறப்பிக்கலாம்.

(5) அபராதமாக வசூலிக்கப்படும் தொகை மாநிலத்தின் தொகு நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டியதாகும்.

16 டி. குற்றங்களை தள்ளுபடி செய்தல்.- பிரிவு 16 பி-ன் படியான குற்றங்களை தள்ளுபடி செய்ய ப்ரோஸிக்யுஷன் நடவடிக்கைகளுக்கு முன்னரோ பின்னரோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவருக்கு அரசு அறிவிக்கை மூலம் நியமிக்கின்ற தொழில்/கயிறு துறையின் இணை இயக்குநருக்கு இணையான பதவியிலுள்ள கோம்பவுண்டிங் ஆபிஸர் முன் விண்ணப்பம் சமர்ப்பிக்க செய்யவும் மேற்குறிப்பிட்ட துறையின் படி

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/
File No. PTGD/1547/2026-P2 (Computer No: 322697)

விதிக்கப்பட்டுள்ள அபராத தொகையின் எழுபத்தைந்து சதவீதம் செலுத்தினால் கோம்பவுண்டிங் ஆபிஸர்க்கு தள்ளுபடி செய்யலாம்.

(2) குற்றங்கள் தள்ளுபடி செய்வதற்கான அனைத்து விண்ணப்பங்களும் நிர்ணயிக்கப்படும் படியான அத்தகைய படிவத்திலும், அத்தகைய முறையிலும் வழங்க வேண்டும்.

(3) குற்ற வழக்கு நடவடிக்கைகளுக்கு முன்னர் ஒரு குற்றங்கள் தள்ளுபடி செய்வதாக, அத்தகைய சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டப்பட்டவர் மீது மேற்குறிப்பிட்ட குற்றம் தொடர்பாக எந்தவொரு குற்றவழக்கு விசாரணை நடவடிக்கையும் தொடங்கக்கூடாது.

(4) குற்ற வழக்கு விசாரணை நடவடிக்கைகள் தொடங்கிய பிறகு குற்றங்களை தள்ளுபடி செய்வது நீதிமன்றத்தின் அனுமதியுடன் மட்டுமே இருக்க வேண்டியதும் அத்தகைய தள்ளுபடிக்கு பிறகு குற்றம் சாட்டப்பட்டவர் மேற்கூறிய குற்றத்தில் இருந்து குற்றமற்றவராவதுமாகும்.

(5) குற்றங்கள் தள்ளுபடி செய்வதன் மூலம் கிடைக்கும் தொகை மாநிலத்தின் தொகு நிதியில் வரவு வைக்கப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/
ile No. PTGD/1547/2026-F2 (Computer No. 322697)

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -பி) துறை

அறிக்கை

எண்:103/ச.இ.பி 1/2024/சட்டம். திருவனந்தபுரம், 2026 மார்ச் 16
1201 மீனம் 2
1947 பால்குனம் 25.

கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டம் பொது மக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டபடியான மசோதாவிற்கு 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப் பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி
கெ.ஜி.சனல் குமார்,
சட்ட செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2026-ன் 10-வது சட்டம்

2026-ன் கேரள அரசு பணியாளர் தேர்வாணையம் (கேரள மாநில பல்லுயிர் வாரியத்தின் கீழுள்ள சேவைகள் தொடர்பான கூடுதல் பொறுப்புகள்) சட்டம்

கேரள மாநில பல்லுயிர் வாரியத்தின் கீழுள்ள சேவைகள் தொடர்பான கேரள அரசு பணியாளர் தேர்வாணையம் சில கூடுதல் பொறுப்புகளை ஏற்பாடு செய்வதற்கான

ஒரு

சட்டம்

முன்னுரை.- கேரள மாநில பல்லுயிர் வாரியத்தின் கீழுள்ள சேவைகள் தொடர்பாக கேரள அரசு பணியாளர் தேர்வாணையம் சில கூடுதல் பொறுப்புகளை நிர்வகிப்பதற்கு ஏற்பாடு செய்வது உகந்ததாக இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் எழுபத்து ஏழாவது ஆண்டில் பின்வரும் படியாக சட்டம் இயற்றப்படுகிறது:-

1. சுருக்கத் தலைப்பு மற்றும் தொடக்கம்.- (1) இந்தச் சட்டத்திற்கு 2026-ன் கேரள அரசு பணியாளர் தேர்வாணையம் (கேரள மாநில பல்லுயிர் வாரியத்தின் கீழுள்ள சேவைகள் தொடர்பான கூடுதல் பொறுப்புகள்) சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது அரசு, அரசிதழ் அறிக்கை வாயிலாக, குறிப்பிட்ட தேதியில் அமலுக்கு வருவதாகும்.

(2) வரையறைகள்:- இந்த சட்டத்தில், சூழல் பிறவகையில் தேவைப்படாத பட்சம்,-

(எ) "வாரியம்" என்றால் 2002-ன் உயிரியல் பன்முகத்தன்மை சட்டத்தின் (2003-ன் 18-வது மத்திய சட்டம்) பிரிவு 22-ன் கீழ் நிறுவப்பட்டதும் 2008-ன் கேரள உயிரியல் பன்முகத்தன்மையின் விதிகளின் படி செயல்பட்டு வருவதுமான கேரள மாநில பல்லுயிர் வாரியம் எனப்பொருள்படும்;

(பி) "அரசு பணியாளர் தேர்வாணையம்" என்றால் கேரள அரசு பணியாளர் தேர்வாணையம் எனப்பொருள்படும்;

(சி) "சேவைகள்" என்றால் கேரள மாநில பல்லுயிர் வாரியத்தின் கீழான சேவைகள் எனப்பொருள்படும்.

3. வாரியத்தின் கீழுள்ள சேவைகள் தொடர்பான அரசு பணியாளர் தேர்வாணையத்தின் பொறுப்புகள்.- (1) வாரியத்தின் சேவைகளின் கீழுள்ள பதவியிடங்களில் நேரடியான நியமனம் வாயிலாக ஊழியர்களை நியமிப்பதற்காக, விண்ணப்பதாரர்களின் தேர்வுப் பட்டியலை தயாரிப்பது அரசு பணியாளர் தேர்வாணையத்தின் பொறுப்பாக இருக்கும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(2) வாரியம், அரசு பணியாளர் தேர்வாணையத்துடன்,-

(எ) வாரியத்தின் சேவைகளின் கீழுள்ள பதவியிடங்களுக்கான நியமன முறையுடன் தொடர்புடைய அனைத்து விஷயங்களிலும்;

(பி) வாரியத்தின் சேவைகளின் கீழுள்ள பதவியிடங்களுக்கு நேரடியான நியமனம் வாயிலாக நியமனங்கள் மேற்கொள்ளும்போது பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளின் அடிப்படையிலும் அத்தகைய நியமனங்களுக்கு விண்ணப்பதாரர்களின் தகுதி நிலை குறித்தும்,

கலந்தாலோசித்திட வேண்டும்.

(3) துணைப்பிரிவு (2)-ன் கீழ் தங்களுடன் கலந்தாலோசிக்கப்பட்ட எந்தவொரு விஷயத்தைக் குறித்தும் ஆலோசனை வழங்க வேண்டியது அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கடமையாக இருக்கும்;

ஆனால், பொதுவானதோ ஏதேனும் குறிப்பிட்ட விஷயத்திலோ குறிப்பிட்ட பிரிவு விஷயங்களிலோ குறிப்பிட்ட சூழ்நிலைகளிலோ அரசு பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியம் இல்லாத விஷயங்கள் என்னென்ன என்பதை குறிப்பிட்டு தெளிவுபடுத்துகின்ற விதிகளை அரசு இயற்றலாம்.

(4) அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் வாரியத்திற்கு இடையே ஏதேனும் கருத்து வேறுபாடு இருக்கும் பட்சம், வாரியம் அந்த விஷயத்தை அரசுக்கு பரிந்துரைக்க வேண்டியதும், அதன் மீதான அரசின் முடிவு இறுதியானதாக இருப்பதாகும்:

ஆனால், அரசு, அரசு பணியாளர் தேர்வாணையத்தின் அறிவுரைக்கு எதிராக ஒரு முடிவை எடுக்கும் முன்னர் அந்த விஷயத்தை அரசு பணியாளர் தேர்வாணையத்திற்கு பரிந்துரைக்க வேண்டும்.

4. விதிகளை இயற்றுவதற்கான அதிகாரம்.- (1) அரசு, இந்த சட்டத்தின் நோக்கங்களை செயல்படுத்துவதற்காக, அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் வாரியத்துடன் கலந்தாலோசித்து, அரசிதழ் அறிக்கை வாயிலாக, விதிகளை உருவாக்கலாம்.

(2) குறிப்பாக, மேற்கூறிய அதிகாரத்தின் தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அத்தகைய விதிகளில்,-

(எ) அரசு பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிப்பதற்காக வாரியம் பின்பற்ற வேண்டிய செயல்முறை;

(பி) அரசு பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்க தேவையில்லாத ஏதேனும் விஷயம்;

(சி) அரசு பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கும் நோக்கத்திற்காக ஏற்புடைய அல்லது தேவையான ஏதேனும் விஷயம்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆகியவற்றை ஏற்பாடு செய்யலாம்.

(3) இந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அது உருவாக்கப்பட்ட பிறகு இயன்றளவு விரைவாக, சட்டமன்ற கூட்டத்தொடரில் இருக்கும்போது, சட்டப்பேரவையின் முன்பாக ஒரு கூட்டத்தொடரிலோ அல்லது அடுத்தடுத்த இரண்டு கூட்டத்தொடர்களிலோ உட்படும் மொத்தம் பதினான்கு நாட்களுக்கு வைக்க வேண்டியதும், அவ்வாறு அது எந்த கூட்டத்தொடரில் வைக்கப்படுகிறதோ அந்த கூட்டத்தொடரோ அதனை தொடர்ந்து வரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்னர், சட்டப்பேரவை அந்த விதியில் ஏதேனும் திருத்தம் செய்யவோ அல்லது அந்த விதி இயற்றப்பட வேண்டியதில்லை என முடிவு செய்யும் பட்சம், அந்த விதிக்கு, அதற்குப் பின், அதது சங்கதி போல, அத்தகைய திருத்தம் ஏற்படுத்தப்பட்ட வடிவத்தில் மட்டுமே அமலாக்கத்தில் இருக்கவோ அல்லது எந்தவொரு அமலாக்கமும் இல்லாமல் போவதும் ஆகும்; எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் திருத்தம் அல்லது இரத்து செய்தல் அந்த விதியின் கீழ் முன்னர் செய்த ஏதேனும் விஷயத்தின் செல்லுபடித் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இருந்திட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் - டி) துறை

அறிக்கை

எண்:53/ச.இ.டி 1/2023/சட்டம். திருவனந்தபுரம், 2025 நவம்பர் 5
1201 துலாம் 19
1947 கார்த்திகம் 14

கேரள மாநில சட்டமன்றப்பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டமன்றப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29- ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி
கெ.ஜி. சனல் குமார்,
சட்ட செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2025-ன் 11-வது சட்டம்

2025-ன் கேரள பொது ஆவணங்கள் சட்டம்

அரசு துறைகள், உள்ளாட்சி நிறுவனங்கள், மாநில பொதுத்துறை நிறுவனங்கள் அரசால் அமைக்கப்பட்ட ஆணையங்கள், வாரியங்கள் மற்றும் குழுக்கள் ஆகியவற்றின் ஆவணங்களை மதிப்பிடுதல், சேகரித்தல், வகைப்படுத்தல், பாதுகாத்தல், நிர்வகித்தல், தனியார் மூலங்களிலிருந்து ஆவணங்களைப் பெறுதல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் அதனுடன் இணைந்ததோ அதற்கு தொடர்புடையதோ ஆன காரியங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள

ஒரு

சட்டம்

முன்னுரை.- அரசு துறைகள், உள்ளாட்சி நிறுவனங்கள், மாநில பொதுத் துறை நிறுவனங்கள், அரசால் அமைக்கப்பட்ட ஆணையங்கள், வாரியங்கள், குழுக்கள் ஆகியவற்றின் பொதுப் ஆவணங்களை மதிப்பிடுதல், சேகரித்தல், வகைப்படுத்தல்,பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தல், தனியார் மூலங்களிலிருந்து ஆவணங்களைப் பெறுதல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் அதனுடன் இணைந்ததோ அதற்கு தொடர்புடையதோ ஆன காரியங்களுக்காக ஏற்பாடு செய்வது உகந்ததாக இருப்பதால்;

இந்தியக் குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் பின்வரும் படியாக சட்டம் இயற்றப்படுகிறது:-

அத்தியாயம் I

தொடக்கம்

1. சுருக்கப்பெயர் மற்றும் தொடக்கம்.- (1) இந்தச் சட்டம் 2025-ன் கேரள பொது ஆவணச் சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது உடனடியாக அமலுக்கு வருவதாகும்.

2. வரையறைகள்.- இந்தச் சட்டத்தில் சந்தர்ப்பம் பிற வகையில் தேவைப்படாத பட்சம்,-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(എ) ''മതിപ്പീടു'' എന്നാൽ പൊതു ആവണങ്ങളിൻ വരലാറ്റു മതിപ്പൈ ആയ്വു ചെയ്തൽ എനപ് പൊരുൾപടും;

(പി) ''വാരിയം'' എന്നാൽ ഇന്തച് ചട്ടത്തിൻ പിരിവു 13 തുണൈപ്പിരിവു (1)-ൻ പടി ഉരുവാക്കപ്പട്ട ആവണ കാപ്പക ആലോചനൈക് കുഴു എനപ് പൊരുൾപടും;

(സി) ''ചെയൽപാടു ഇഴന്ത നിറുവനങ്കൾ'' എന്നാൽ പൊരുളാതാരം തൊഴിൽനുട്പം അല്ലതു പിറ കാരണങ്കൾ മൂലം ചെയൽപടുവതൈ നിറുത്തിയ അരചിൻ കീഴുൾള തുറൈകൾ അല്ലതു നിറുവനങ്കൾ, തനിയാർ നിറുവനങ്കൾ എനപ്പൊരുൾപടും;

(ടി) ''ഇയക്കുനർ'' എന്നാൽ മാനില ആവണക് കാപ്പകത് തുറൈയിൻ ഇയക്കുനർ എനപ്പൊരുൾപടും;

(ഇ) ''കോപ്പു'' എന്നാൽ ആവണങ്കളിൻ ഒരു പകുതിയാകവും ഒരു കുറിപ്പിട്ട വിഷയം തൊടർപാന കടിതപ് പരിമാറ്റങ്കൾ, കുറിപ്പുകൾ ആകിയവൈ ഉട്പടും കോപ്പു എണ്ണുടനാന ആവണങ്കളിൻ തൊകുപ്പു എനപ് പൊരുൾപടും;

(എ൯പ്) ''അരചു'' എന്നാൽ കേരള അരചു എനപ്പൊരുൾപടും;

(ജി) ''തുറൈത് തലൈവർ'' എന്നാൽ പൊതു ആവണങ്കളൈ ഉരുവാക്കും നിറുവനത്തിൻ തലൈവർ എനപ് പൊരുൾപടും;

(എച്) ''കാലമുറൈ പകുപ്പായ്വു'' എന്നാൽ തീർപ്പാക്കപ്പട്ട കോപ്പുകളൈ പാതുകാക്ക അല്ലതു അഴിക്ക വേണ്ടിയ കാലത്തിറ്കുൾ അവറ്റൈ മറുമതിപ്പീടു ചെയ്യും മുറൈ എനപ്പൊരുൾപടും;

(ഐ) ''പരിന്തുരൈക്കപ്പട്ട'' എന്നാൽ ഇന്ത സട്ടത്തിൻ കീഴ് ഏറ്പടുത്തപ്പട്ട വിതികളാൽ പരിന്തുരൈക്കപ്പട്ട എനപ്പൊരുൾപടും;

(ജെ) ''പൊതു ആവണങ്കൾ'' എൻപതിൽ ആവണങ്കളൈ ഉരുവാക്കുകിന്റ നിറുവനത്തിൻ,-

(i) ഏതേനും കൈയെഴുത്തു പിരതി, ചെപ്പുത് തകടുകൾ, ചെപ്പു ഓലൈകൾ, മൂങ്കിൽ തുണ്ടുകൾ, പനൈ ഓലൈകൾ, പണ്ടൈയ നൂൽകൾ, ഏടുകൾ, വഴക്കുക് കോപ്പുകൾ, വിളക്കപ്പടം, വരൈപടങ്കൾ, പുകൈപ്പടങ്കൾ, അട്ടവണൈകൾ, ആവണങ്കൾ, കാകിത ആവണങ്കൾ, കോപ്പുകൾ, കേൻവാസ് ആവണങ്കൾ, തിട്ട വരൈപടങ്കൾ,ഒലിപ്പതിവുകൾ ആകിയവൈയും പിറ പൽവേറു ഊടകങ്കളിൻ പതിവുകളുമ്;

(ii) എന്തവൊരു മൈക്രോ ൎപിലിം, മൈക്രോ പിരഷരും ആവണങ്കളിൻ ൎപ്പാക്സി സിമിലി നകലും;

(iii) അന്ത വകൈയിലാന മൈക്രോ ൎപിലിമിൽ ഉൾള പടം അല്ലതു പടങ്കളിൻ അചൽ അളവിൽ ഇരുന്താലും ഇല്ലാവിട്ടാലും ഉൾള ഏതേനും മറു ഉരുവാക്കമും;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(iv) கணினி அல்லது பிற ஏதேனும் கருவிகளால் உருவாக்கப்படும் பிற ஏதேனும் ஆவணமும்,

உட்படுவதாகும்;

(கெ) ''காப்பக மதிப்புள்ள பொது ஆவணங்கள்'' என்றால் மாநில ஆவண காப்பக துறைப் பெற்றுக்கொள்ளலாம் என வாரியம் பரிந்துரை செய்துள்ள வரலாற்று ரீதியாகவோ தேசிய ரீதியாகவோ நிர்வாக ரீதியாகவோ முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள் எனப் பொருள்படும்;

(எல்) ''நிரந்தர மதிப்புடைய பொது ஆவணங்கள்'' என்றால் மாநிலத்தில் தற்போதுள்ள பொது ஆவணங்களின் நிர்வாகம், பாதுகாப்பு, மதிப்பீடு, அகற்றுதல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதுமான பல்வேறு அலுவலக கையேட்டின் படி மதிப்பீடு செய்த பிறகு அழிக்கக் கூடாதவை என அடையாளம் காணப்பட்ட ஆவணங்கள் எனப்பொருள்படும்;

(எம்) ''வாங்குதல் குழு'' என்றால் இந்தச் சட்டத்தின் பிரிவு 17 துணைப்பிரிவு (1)-ன் படி அமைக்கப்படும் குழு எனப்பொருள்படும்;

(என்) ''ஆவணங்களை உருவாக்கும் முகமை'' என்றால்,-

(i) அரசு துறைகளும் அலுவலகங்களும்;

(ii) ஏதேனும் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள ஆணையங்களும் வாரியங்களும் அவற்றின் அலுவலகங்களும், முழுவதுமாகவோ ஒரு பகுதியாகவோ அரசின் கட்டுப்பாட்டிலோ நிதி உதவியிலோ செயல்படுகின்ற நிறுவனங்களும் குழுக்களும்;

(iii) உள்ளாட்சி அமைப்புகளும் அதைச்சார்ந்த அலுவலகங்களும் எனப்பொருள்படும்;

(ஒ) ''தனியார் மூலங்களில் இருந்துள்ள ஆவணங்கள்'' என்றால் ஒரு தனிநபர் அல்லது ஏதேனும் அமைப்பு சாரா அமைப்புகளின் கைவசமுள்ள பதிவுகள் எனப்பொருள்படும்;

(பி) ''ஆவண அதிகாரி'' என்றால் இந்தச் சட்டத்தின் பிரிவு 5-ன் துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஆவணங்களை உருவாக்கும் முகமையால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி எனப்பொருள்படும்;

(க்யூ) ''குறிப்பு ஊடகம்'' என்றால் பொது ஆவணங்களை கண்டறிவதற்காக, ஆவணங்களை உருவாக்குகின்ற முகமைகளோ, ஆவண காப்பகத் துறையோ, அந்தந்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப, தயார் செய்து பராமரிக்கப்படும் ஏதேனும் சரிபார்ப்புப் பட்டியல், இடமாற்றப்பட்டியல், பொருள்சார்பட்டியல், விளக்கப்பட்டில் ஆகியவையும்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

பரிந்துரைக்கும் படியான முறையில் இந்தத் தேவைக்காக நிர்ணயிக்கப்பட்ட பிற வழிமுறைகளும் எனப்பொருள்படும்;

(ஆர்) ''தக்கவைப்பு அட்டவணை'' என்றால் பிரிவு 6-ன் துணை உட்பிரிவு (இ)-ன் படி தயாரிக்கப்படும் அட்டவணை எனப்பொருள்படும்;

(எஸ்)''விதிகள்'' என்றால் இந்தச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் எனப்பொருள்படும்;

(டி) ''மாநிலம்'' என்றால் கேரள மாநிலம் எனப்பொருள்படும்;

அத்தியாயம் - II

பொது ஆவணங்கள்

3. பொது ஆவணங்களின் நிர்வாகம், பராமரிப்பு, மதிப்பீடு ஆகியவற்றுடன் தொடர்புடைய செயல்பாடுகளின் ஒருங்கிணைப்பு, கட்டுப்பாடு மேற்பார்வை ஆகியவற்றிற்கான அரசின் அதிகாரம்.- (1) இந்த சட்டத்தின் கீழுள்ள பொது ஆவணங்களின் நிர்வாகம், மேலாண்மை, பராமரிப்பு, தேர்வு செய்தல், மதிப்பீடு, தீர்த்தல், அழித்தல் ஆகியவற்றுடன் தொடர்பான செயல்பாடுகளின் ஒருங்கிணைப்பு, கட்டுப்பாடு, மேற்பார்வையிடுவதற்கு அரசுக்கு அதிகாரம் இருப்பதுமாகும்.

(2) அரசு, ஆவணங்களை உருவாக்கும் முகமைகளின் பொது ஆவணங்கள் தொடர்பான உத்தரவு மூலம், பின்வருகின்ற அனைத்தும் அல்லது ஏதேனும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக அத்தகைய உத்தரவில் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய உத்தரவில் நிபந்தனைகளின் உட்பட்டு இயக்குநர் அல்லது பிற ஏதேனும் அதிகாரியை அதிகாரப்படுத்த வேண்டியதாகும், அதாவது:-

(எ) வரலாற்று ஆவணக் காப்பகங்களை மேற்பார்வையிடுதல் நிர்வகித்தல் கட்டுப்படுத்துதல்;

(பி) நிரந்தர தன்மையுள்ள பொதுஆவணங்களை பரிந்துரைக்கக்கூடிய அத்தகைய காலயளவிற்குப் பிறகு, பாதுகாப்பிற்காக ஏற்றுக்கொள்ளுதல்;

(சி) பொதுஆவணங்களின் பாதுகாப்பு பயன்பாடு மற்றும் திரும்பப் பெறுதல்;

(டி) பொது ஆவணங்களின் முறைப்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் காட்சிப்படுத்தல்;

(இ) பொதுஆவணங்களின் விவரப்பட்டியல்கள், குறியீடுகள், பட்டியல் குறிப்பேடுகள், பிற குறிப்பு ஊடகங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(எஃப்) ஆவணங்களைக் கையாளும் அமைப்பை மேம்படுத்துவதற்கான தரநிலைகள், நடவடிக்கை முறைகள், திட்டங்கள் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்தல், விரிவுபடுத்துதல், ஊக்குவித்தல், ஒருங்கிணைத்தல்;

(ஜி) மாநில ஆவணக் காப்பகத்தின் ஆவணங்களை உருவாக்கும் முகமைகளின் அலுவலகங்களின் பொது ஆவணங்களின் பராமரிப்பு, முறைப்படுத்தல், பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்தல்;

(எச்) பொது ஆவணங்களைப் பாதுகாப்பதற்கும் கருவிகளை பராமரிப்பதற்காக கிடைக்கக்கூடிய இடத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்;

(ஐ) பொதுஆவணங்களின் தொகுத்தல், வகைப்படுத்தல் மற்றும் அகற்றல் ஆகியவற்றை குறித்தும் பதிவுகளை கையாளுவதற்கான தரநிலைகள் நடவடிக்கை முறைகள் மற்றும் நுட்ப திட்டங்களை பயன்படுத்துவது குறித்தும் ஆவணங்களை உருவாக்குகின்ற முகமைகளுக்கு ஆலோசனை வழங்குதல்;

(ஜெ) பொது ஆவணங்களை கணக்கெடுத்தல் மற்றும் ஆய்வு செய்தல்;

(கெ) ஆவண காப்பக நிர்வாகம் மற்றும் ஆவணங்கள் மேலாண்மை ஆகியப் பிரிவுகளில் பயிற்சி திட்டங்களை ஏற்பாடு செய்தல்;

(எல்) தனியார் மூலங்களிலிருந்து காப்பக மதிப்புள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ளுதல்;

(எம்) பொது ஆவணங்களுக்கான அணுகலை முறைப்படுத்துதல்;

(என்) செயல்படாத நிறுவனங்களிடமுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ளுதலும் தேசிய அவசர நிலைகளில் பொது ஆவணங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அமைப்பை ஏற்பாடு செய்தலும்;

(ஒ) ஆவணங்களை மேலாண்மை செய்வதற்கும் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கை முறைகள் தொடர்பாக ஆவண அதிகாரியிடம் இருந்து அறிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல்;

(பி) பொது ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் அல்லது அவற்றிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளின் நகல்களைப் பரிந்துரைக்கப்படக் கூடிய முறையில் வழங்குதல்;

(க்யூ) பொது ஆவணங்களை அழித்தலும் அகற்றுதலும்;

(ஆர்) வரலாற்று ரீதியாகவோ தேசிய ரீதியாகவோ நிர்வாக ரீதியாகவோ முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு ஆவணத்தையும் விற்பனைக்கோ பரிசாகவோ பரிந்துரைக்கப்படக்கூடிய பிற ஏதேனும் வகையிலோ ஏற்றுக்கொள்ளுதல்;

(எஸ்) 2005-ன் பேரிடர் மேலாண்மை சட்டத்தின் (2005-ன் 53-வது மத்திய சட்டம்) கீழ் பேரிடர்'' என்ற வரையறையில் உட்படும் பேரிடர்களில் அகப்பட்டு சேதம்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அடைந்த பொது ஆவணங்களின் பாதுகாப்பிற்குத் தேவையான வழிமுறைகளை வழங்குதல்.

4. நிரந்தர மதிப்பு வாய்ந்த ஆவணங்களின் அசலை மாநிலத்திற்கு வெளியே எடுத்து செல்வதற்கு தடை.- அரசின் முன் அனுமதியின்றி, எந்தவொரு நபரோ நிறுவனமோ நிரந்தர மதிப்பு வாய்ந்த ஆவணங்களின் அசல், மாநிலத்திற்கு வெளியே எடுத்து செல்லவோ எடுத்து செல்லும் சூழலை ஏற்படுத்தவோ செய்தல் கூடாததாகும்:

ஆனால், அலுவல் சார்ந்த நோக்கத்திற்காக ஏதேனும் நிலையான மதிப்பு வாய்ந்த பொது ஆவணங்களின் அசலை மாநிலத்திற்கு வெளியே எடுத்து செல்வதற்கோ அனுப்பி வைப்பதற்கோ அத்தகைய முன் அனுமதி எதுவும் தேவைப்படாது.

5. ஆவண அதிகாரி.- (1) ஆவணங்களை உருவாக்குகின்ற ஒவ்வொரு முகமையும் அதன் அதிகாரிகளிலிருந்து ஒரு நபரை இந்த சட்டத்தின் கீழுள்ள செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ஆவண அதிகாரியாக நியமித்திட வேண்டும்.

(2) ஆவணங்களை உருவாக்குகின்ற அனைத்து முகமைகளும் அந்தந்த அலுவலங்களில் அதற்கு உகந்ததெனத் தோன்றும் அத்தகைய இடங்களில் அத்தகைய எண்ணிக்கையில் ஆவண காப்பக அறைகளை நிறுவ வேண்டியதும் ஒவ்வொரு ஆவண காப்பக அறைக்கும் ஒரு ஆவண அதிகாரியை நியமித்திட வேண்டும்.

6.ஆவண அதிகாரியின் பொறுப்புகள்.- ஆவண அதிகாரிக்கு பின்வரும் பொறுப்புகள் இருப்பதாகும், அதாவது.-

(எ) அவரின் பொறுப்பிலுள்ள பொது ஆவணங்களை முறையாக ஒழுங்குபடுத்தல் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்;

(பி) பரிந்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள் அனைத்து பொது ஆவணங்களையும் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்தல் மற்றும் பொது ஆவணங்களை தவிர்த்தலும்;

(சி) நிலையான மதிப்புள்ள பொது ஆவணங்களை தக்க வைத்துக்கொள்வதற்காக மாநில ஆவண காப்பகத் துறையுடன் கலந்தாலோசித்து இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள பழமை வாய்ந்த பொது ஆவணங்களைப் பரிந்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் மதிப்பீடு செய்தல்;

(டி) பிரிவு 8-ன் துணைப்பிரிவு (1)-ல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள படி பொது ஆவணங்களை அழித்தல்;

(இ) பொது ஆவணங்களை தக்க வைத்தல் காலயளவை குறிப்பிடுவதற்காக ஒரு தக்க வைத்தல் அட்டவணையை தயாரித்தல்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(எஃப்) பரிந்துரைக்கக்கூடிய அத்தகைய முறையில், வகைப்படுத்தப்பட்ட பொது ஆவணங்களின் வகை நீக்கம் செய்வதற்கான காலமுறை மதிப்பீடுகளை நடத்திய பின்னர் பரிந்துரைகளை சமர்ப்பித்தல்;

(ஜி) ஆவணங்களை கையாளுவதற்கான அமைப்பையும் பொது ஆவணங்களின் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்காக அவ்வப்போது மாநில ஆவண காப்பகத் துறை பரிந்துரை செய்யக்கூடிய அத்தகைய நிபந்தனைகளையும் நடவடிக்கை முறைகளையும் நுட்ப திட்டங்களையும் ஏற்றுக்கொள்ளுதல்;

(எச்) பொது ஆவணங்களின் வருடாந்திர அட்டவணைகளை திரட்டுதல்;

(ஐ) நிறுவன அமைப்பு வரலாற்றையும் அதற்கான வருடாந்திர துணை தொகுப்பையும் ஒருங்கிணைத்தல்;

(ஜெ) பொது ஆவணங்களை மேலாண்மை செய்வதற்காக மாநில ஆவண காப்பக துறையை உதவுதல்;

(கெ) பரிந்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் இயக்குநருக்கு வருடாந்திர அறிக்கையை சமர்ப்பித்தல்;

(எல்) இயக்குநரின் பரிந்துரைகளுக்கு ஏற்றவாறு ஏதேனும் செயல்படாத நிறுவனங்களின் ஆவணங்களை மாநில ஆவணக் காப்பகத் துறைக்கு மாற்றம் செய்தல்;

7.ஆவண அதிகாரியின் பொறுப்பிலுள்ள பொது ஆவணங்கள் அங்கீகரிக்கப்படாமல் அகற்றப்படுதல், அழித்தல் போன்ற நிகழ்வுகளில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதாகும்.- (1) ஆவண அதிகாரியின் பொறுப்பிலுள்ள ஏதேனும் பொது ஆவணங்கள் அங்கீகரிக்காமல் அகற்றப்படுதல் அல்லது அழிக்கப்படுதல் அல்லது சிதைவடைய செய்தல் அல்லது உருமாற்றுதல் செய்யப்பட்டுள்ளது என பதிவுகள் அதிகாரி உணரும் பட்சம்,-

(i) மேற்குறிப்பிட்ட தகவலை அதிகபட்சம் ஒரு மாதத்திற்குள் துறை தலைவரிடம் அறிக்கை செய்ய வேண்டியதும் துறைத் தலைவர் அதன் அடிப்படையில் துறை சார்ந்த விசாரணை நடத்தப்பட்டு மேல் நடவடிக்கையை எடுக்க வேண்டியதும்;

(ii) அத்தகைய பொது ஆவணங்களை மீட்டெடுக்க அல்லது பழைய நிலைக்கு மீட்டமைக்க ஆவண அதிகாரி உடனடியாக உகந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதுமாகும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விவரங்கள் அதிகபட்சம் மூன்று மாதத்திற்குள் இயக்குநருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட வேண்டியதாகும்.

(3) ஆவண அதிகாரி, பொது ஆவணங்களை மீட்டெடுக்க அல்லது பழைய நிலைக்கு மிட்டமைப்பதற்கான தேவைக்காக,-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(i) எந்தவொரு அரசு அதிகாரியின் உதவியைத் கோர வேண்டியதும் அத்தகைய அதிகாரி அவ்வாறான அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டியதும்;

(ii) தொடர்புடைய எந்தவொரு நபரின் தொழில் நுட்பமோ பிற வகையிலோவான உதவிகளை ஏற்றுக்கொள்ள,

வேண்டியதுமாகும்.

8. பொது ஆவணங்களை அழித்தல் அல்லது அகற்றுதல்.- (1) 1961-ன் கேரள ஆவணங்களை அழித்தல் சட்டம் (1962-ன் 2) அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் அல்லது இந்த சட்டத்தின் கீழ் இயற்றப்படும் அத்தகைய விதிகளின், அதது சங்கதிபோல, விதிமுறைகளுக்கு உட்படும் அத்தகைய முறையில் அல்லது எந்தவொரு பொது ஆவணத்தை அழித்தலோ பிற வகையில் அகற்றுதலோ கூடாததாகும்.

(2) நூறு ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த எந்தவொரு ஆவணமும், காப்பக ஆவணமாக பயன்படுத்த முடியாத வகையில் அது சேதமடைந்துள்ளது என்ற இயக்குநரின் அறிக்கையின் அடிப்படையில் அரசின் அனுமதியுடன் அல்லாமல் அழித்தல் கூடாததாகும்.

9. வழக்கு தாக்கல் செய்வதற்கான அதிகாரம் மற்றும் தண்டனை.- (1) இந்த சட்டத்தின் படியோ அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் படியோ தண்டனைக்குரிய எந்தவொரு விஷயம் தொடர்பாக துறைத் தலைவர் அல்லது அவர் பொறுப்பை ஒப்படைத்துள்ள அதிகாரி நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்யலாம்.

(2) இந்த சட்டத்தின் பிரிவு 4 அல்லது பிரிவு 8-ன் விதிமுறைகளை மீறும் எந்தவொரு நபரும், அதது சங்கதிபோல,-

(i) நூறு ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்ததோ ஆவண காப்பக மதிப்பு வாய்ந்ததோவான ஆவணங்கள் தொடர்பாக நிரூபிக்கப்பட்ட குற்றத்திற்கு ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறை தண்டனை அல்லது ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீடிக்கக்கூடிய அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து வழங்கி தண்டிக்கப்பட வேண்டியதாகும்;

(ii) நிரந்தர மதிப்பு வாய்ந்த பொது ஆவணங்கள் தொடர்பாக நிரூபிக்கப்பட்ட குற்றங்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை நீடிக்க கூடிய சிறை தண்டனை அல்லது இருபத்து ஐயாயிரம் ரூபாய் வரை நீடிக்கக்கூடிய அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து வழங்கி தண்டிக்கப்பட வேண்டியதாகும்;

(iii) இனம் (i) மற்றும் இனம் (ii)-ல் குறிப்பிட்டுள்ளவை தவிரவுள்ள பொது ஆவணங்கள் தொடர்பாக நிரூபிக்கப்பட்ட குற்றங்களுக்கு ஆறு மாதம் வரை நீடிக்க கூடிய சிறை தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீடிக்க கூடிய அபராதம் அல்லது இரண்டையும் சேர்த்து அல்லது சமூக சேவையும் வழங்கி தண்டிக்கப்பட வேண்டியதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

10. இரகசிய தன்மை வாய்ந்தது அல்லது பாதுகாப்பு பிரிவில் உட்பட்டது அல்லது வகைப்படுத்தப்பட்ட ஆவணங்கள்.- ஆவணங்களை உருவாக்குகின்ற முகமைகள், இரகசிய தன்மை வாய்ந்தது அல்லது பாதுகாப்பு பிரிவில் உட்பட்டது அல்லது வகைப்படுத்தப்பட்ட எந்தவொரு பொது ஆவணமும் மாநில ஆவண காப்பகத் துறையிடம் மாற்றம் செய்யப்பட வேண்டியதில்லை.

11. தனியார் மூலங்களிலிருந்து ஆவணங்களைப் பெறுதல்.- (1) வரலாற்று ரீதியாகவோ தேசிய ரீதியாகவோ நிர்வாக ரீதியாகவோ முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு ஆவணத்தையும், பரிசாகவோ விலைக்கு வாங்கவோ பிற வகையிலோ தனியார் மூலங்களிலிருந்து பரிந்துரைக்கப்படக்கூடிய படி மாநில ஆவண காப்பகத் துறை பெற வேண்டியதாகும்.

(2) மாநில ஆவண காப்பகத் துறை, பரிந்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையிலும் அவ்வாறான நிபந்தனைகளுக்கும் உட்பட்டு துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ள எந்தவொரு ஆவணத்தையும் எந்தவொரு அதிகார பூர்வ ஆராய்ச்சியாளருக்கும் பயன்பாட்டிற்கு கிடைக்க செய்ய வேண்டியதாகும்.

12. பொது ஆவணங்களின் அணுகல்.- (1) முப்பது ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்ததும் மாநில ஆவணக்காப்பக துறையிடம் மாற்றப்பட வேண்டியதுமான வகைப்படுத்தப்படாத அனைத்துப் பொது ஆவணங்களும் பரிந்துரைக்கப்படக்கூடிய அத்தகைய விதிவிலக்குகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு எந்தவொரு அதிகாரப் பூர்வ ஆராய்ச்சியாளருக்கும் பயன்பாட்டிற்கு கிடைக்கச் செய்ய வேண்டியதாகும்.

விளக்கம்.- இந்தத் துணைப்பிரிவின் தேவைக்காக முப்பது ஆண்டுகள் காலயளவிற்கு கணக்கிடப்பட வேண்டியது பொது ஆவணம் உருவாக்கப்பட்ட ஆண்டிலிருந்து இருக்க வேண்டியதாகும்.

(2) ஆவணங்களை உருவாக்கும் முகமைகள், பரிந்துரைக்கப்பட்டபடியான அத்தகைய முறையிலும் அவ்வாறான நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அதன் பொறுப்பிலுள்ள எந்தவொரு பொது ஆவணத்தையும் அணுகுவதற்கான அனுமதி எந்தவொரு நபருக்கும் வழங்கப்படலாம்.

அத்தியாயம் III

ஆவண காப்பக ஆலோசனை வாரியம்

13. காப்பக ஆலோசனை வாரியம்.- (1) அரசு, இந்தச் சட்டத்தின் தேவைகளுக்காக, அரசிதழ் அறிக்கை வாயிலாக, ஒரு காப்பக ஆலோசனை வாரியத்தையும் உருவாக்கிட வேண்டும்.

(2) வாரியத்தில் பின்வரும் உறுப்பினர்கள் இருக்க வேண்டியதாகும், அதாவது:-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(எ)	மாநில ஆவண காப்பகத் துறையின் பொறுப்பை வகிக்கும் அமைச்சர்	-	தலைவர் (பதவி வழி அல்லாத)
(பி)	செயலாளர் மாநில ஆவண காப்பகத் துறை	-	துணைத்தலைவர் (பதவி வழி அல்லாத)
(சி)	அரசு பெயர் பரிந்துரை செய்யும் இரண்டு சட்டமன்ற பேரவையின் உறுப்பினர்கள்	-	உறுப்பினர்
(டி)	கலாச்சார விவகாரத் துறையின் இணை செயலாளர் பதவிக்கும் குறையாத ஒரு அதிகாரி	-	உறுப்பினர் (பதவி வழி அல்லாத)
(இ)	பணியாளர் நிர்வாக சீர்திருத்தத் துறையின் இணை செயலாளர் பதவிக்கும் குறையாத ஒரு அதிகாரி	-	உறுப்பினர் (பதவி வழி அல்லாத)
(எஃப்)	நிதித்துறையின் இணைச்செயலாளர் பதவிக்கும் குறையாத ஒரு அதிகாரி	-	உறுப்பினர் (பதவி வழி அல்லாத)
(ஜி)	உள்ளாட்சித் துறையின் இணை செயலாளர் பதவிக்கும் குறையாத ஒரு அதிகாரி	-	உறுப்பினர் (பதவி வழி அல்லாத)
(எச்)	உள்துறையின் இணை செயலாளர் பதவிக்கும் குறையாத ஒரு அதிகாரி	-	உறுப்பினர் (பதவி வழி அல்லாத)
(ஐ)	சட்டத்துறையின் இணை செயலாளர் பதவிக்கும் குறையாத ஒரு அதிகாரி	-	உறுப்பினர் (பதவி வழி அல்லாத)
(ஜெ)	இயக்குநர் (மாநில தொல்லியல்) துறை	-	உறுப்பினர் (பதவி வழி அல்லாத)
(கெ)	இயக்குநர் அருங்காட்சியம் - மிருகக்காட்சி சாலை துறை	-	உறுப்பினர் (பதவி வழி அல்லாத)
(எல்)	அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டப்படிப்பும் ஆவணக் காப்பகத்தில் மத்திய/மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா/ இளங்கலை பட்டப்படிப்பை பெற்ற அரசு பெயர் பரிந்துரைக்கும் ஒரு ஆவண காப்பாளர்	-	உறுப்பினர்
(எம்)	அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து தகவல் தொழில் நுட்பக் கல்வியில் பட்டப்படிப்பு அல்லது முதுகலை பட்டப்படிப்பை பெற்ற அரசு பெயர் பரிந்துரைக்கும் ஒரு நபர்	-	உறுப்பினர்
(என்)	அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத் திலிருந்து வரலாறில் முதுகலை	-	உறுப்பினர்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

	பட்டப்படிப்பு அல்லது முனைவராக உள்ள அரசு பெயர் பரிந்துரைக்கின்ற ஒரு நபர்	
(ஒ)	அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஓலைச்சுவடியியலில் முதுகலை பட்டப்படிப்பு அல்லது முனைவராக உள்ள அரசு பெயர் பரிந்துரைக்கின்ற ஒரு நபர் -	உறுப்பினர்
(பி)	இயக்குநர், மாநில ஆவண காப்பகத் துறை -	உறுப்பினர் செயலாளர் (பதவி வழி அல்லாத)

14. வாரியத்தின் பதவிக்காலம்.- (1) வாரியத்திற்கு பெயர் பரிந்துரைக்கப்படும் உறுப்பினர்கள் வாரியம் அமைப்பதற்கான அறிவிப்பு வெளியான தேதி முதல் மூன்று வருடங்களுக்கு மிகாமல் அரசு நிர்ணயிக்கின்ற காலயளவிற்கு பதவியை வகிக்க வேண்டியதாகும்.

(2)பெயர் பரிந்துரை செய்யப்படும் உறுப்பினர்களுக்கு மறுநியமனத்திற்கான தகுதி இருப்பதுமாகும்.

ஆனால் ஒரு நபரை தொடர்ச்சியாக இரண்டு முறைக்கும் கூடுதலாக உறுப்பினராக பெயர் பரிந்துரை செய்தல் கூடாததாகும்.

(3) வாரியத்தின் உறுப்பினர்கள், இந்த சட்டத்திலும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளிலும் விதிமுறைகளுக்கு உட்பட்டு புதிய வாரியம் அமைக்கப்படும் வரை தொடர்ந்து பதவி வகித்திட வேண்டியதுமாகும்.

(4) ஒரு தற்செயல் பணியிடத்தை நிரப்புவதற்காக பெயர் பரிந்துரைக்கப்படும் ஒரு உறுப்பினர் எவரின் பதவியிடத்திற்கு அவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டதோ அந்த உறுப்பினரின் எஞ்சியுள்ள பதவி காலயளவு வரை அப்பதவியில் தொடர்ந்து பதவி வகித்திட வேண்டியதுமாகும்.

(5) பெயர் பரிந்துரை செய்யப்பட்ட ஒரு உறுப்பினர், அரசுக்கு எழுத்து பூர்வமாக தெரிவிப்பதன் மூலம் தனது பதவியை இராஜினாமா செய்யலாம் ஆனால், அரசு அவரின் இராஜினாமாவை ஏற்றுக்கொள்ளும் வரை அவர் தம் பதவியில் தொடர வேண்டியதுமாகும்.

(6) வாரியத்தின் உருவாக்கத்தில் ஏதேனும் குறைபாடு அல்லது ஒழுங்கின்மை இருந்தது என்ற காரணமாகவோ அல்லது ஏதேனும் உறுப்பினரின் பணி காலியிடம் தற்போது உள்ளது என்ற காரணமாகவோ வாரியத்தின் எந்தவொரு செயல் அல்லது நடவடிக்கைகள் செல்லாததாகக் கருதப்படக் கூடாததுமாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(7) வாரியம் அதன் அலுவல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடைமுறைகளைத் தானே தீர்மானித்துக் கொள்ளும்.

(8) பெயர் பரிந்துரை செய்யப்பட்ட உறுப்பினர்களின் படிகள் பரிந்துரைக்கப்பட்டபடியாக இருந்திட வேண்டும்.

15. வாரியத்தின் கூட்டம்.- (1) வாரியத்தின் கூட்டங்கள் தலைவர் தீர்மானிக்கிற படியான இடத்திலும் நேரத்திலும் கூட வேண்டும்:

ஆனால், அடுத்தடுத்து நடைபெறும் இரண்டு கூட்டங்களுக்கு இடையேயான கால இடைவெளி ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(2) வாரிய கூட்டத்திற்கு தலைவர் தலைமை வகித்திட வேண்டும். தலைவர் இல்லாத நிலையில் துணைத்தலைவரும், தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகிய இருவரும் இல்லாத நிலையில் கூட்டத்தில் பங்கேற்றுள்ள உறுப்பினர்களுள் ஒருவர் கூட்டத்திற்கு தலைமை வகித்திட வேண்டும்.

(3) வாரிய கூட்டத்திற்குரிய நபர்களின் எண்ணிக்கை என்பது, மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காக அமைந்திருக்கும்.

16. வாரியத்தின் பணிகள்.- வாரியமானது பின்வரும் பணிகளை மேற்கொள்ளும், அவையாவன:-

(எ) பொது ஆவணங்களின் நிர்வாகம் , மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் பயன்பாடு ஆகியவை தொடர்பான விஷயங்களில் வழிகாட்டுதல்களை வழங்குதல்;

(பி) ஆவண அதிகாரிகளுக்கும், மாநில ஆவண காப்பகத் துறையின் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கான வழிகாட்டுதல்களை வகுத்தல்;

(சி) தனியார் மூலங்களிலிருந்து ஆவணங்களைப் பெறுவதற்கு தேவையான பரிந்துரைகளை வழங்குதல்;

(டி) பரிந்துரைக்கும்படியான அத்தகைய பிற விவகாரங்களை கையாளுதல்.

17. கொள்முதல் குழு.- (1) ஒவ்வொரு முறையும் தனியார் மூலங்களிலிருந்து ஆவணங்களை விலைக்கு வாங்குவதற்கு வாரியம் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கொள்முதல் குழுவை வாரியம் அமைத்திட வேண்டும், அதாவது.-

பதவி வழி அல்லாத உறுப்பினர்கள்

(எ)	செயலாளர் மாநில ஆவண காப்பகத் துறை	..	தலைவர்
(பி)	வாரியத்தில் உறுப்பினராக உள்ள சட்டத்துறை அதிகாரி	..	உறுப்பினர்
(சி)	வாரியத்தின் உறுப்பினராக உள்ள நிதித்துறை அதிகாரி	..	உறுப்பினர்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(டி)	இயக்குநர், மாநில ஆவண காப்பகத் துறை	..	உறுப்பினர் செயலார்

பெயர் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்கள்

தனியார் மூலங்களிலிருந்து ஆவணங்களை விலைக்கு வாங்கும்போது, வாரியம் தேவையெனக் கருதும் பட்சம், தொடர்புடைய படிப்புப் பிரிவில் நிபுணத்துவம் பெற்ற இரு நபர்களை பெயர் பரிந்துரை செய்யலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி அமைக்கப்பட்ட கொள்முதல் குழுவானது, ஒவ்வொரு கொள்முதல் குறித்தும் வாரியத்திற்கு பரிந்துரைகளை வழங்கிட வேண்டும்; அத்தகைய பரிந்துரைகளின் மீது வாரியம் தகுந்த முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்தியாயம் IV

பொதுவான விதிமுறைகள்

18. ஆவணக் காப்பக அறிவியல் பயிற்சியுடன் தொடர்புடைய பாடப்பிரிவுகளுக்கான நெறிமுறைகள் மற்றும் தரநிலைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம்.- வாரியத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு, ஆவணக்காப்பக அறிவியல் மற்றும் அது சார்ந்த பாடங்களில் வழங்கப்படும் பயிற்சிகளுடன் தொடர்புடைய பாடப்பிரிவுகள், பாடத்திட்டங்கள், மதிப்பீடுகள் மற்றும் தேர்வுகளுக்கான நெறிமுறைகள் மற்றும் தரநிலைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் இயக்குநருக்கு இருப்பதுமாகும்.

19. நன்நம்பிக்கையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு.- இந்தச் சட்டத்தின் கீழோ அல்லது அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் கீழோ, நன்நம்பிக்கையில் செய்யப்பட்ட அல்லது செய்ய நோக்கமிடப்பட்ட எந்தவொரு செயல் தொடர்பாக எந்தவொரு நபருக்கும் எதிராக எந்தவொரு வழக்கு சட்ட நடவடிக்கை அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் தொடரப்படலாகாது.

20. பிற சட்டங்களுக்கு பொருந்துதல் தடுக்கப்படுவதில்லை என.- இந்தச் சட்டத்தின் விதிமுறைகள் நடைமுறையில் அமலிலுள்ள பிற ஏதேனும் சட்டத்தின் விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டும் அதற்கு தீங்கு விளைவிக்காமலும் இருப்பதுமாகும்.

21. இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.- (1) இந்த சட்டத்தின் விதிமுறைகளை அமல்படுத்துவதில் ஏதேனும் இடர்பாடு ஏற்படும்பட்சம் அந்த இடர்பாட்டை நீக்கும் நோக்கத்திற்காக தேவையானதெனத் தோன்றும் வகையில் இந்த

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

சட்டத்தின் விதிமுறைகளுக்கு முரணாக இல்லாத விதிமுறைகளை, அரசு அரசிதழில் வெளியிட்ட ஆணையின் மூலம் வகுக்கலாம்.

ஆனால், இந்தச் சட்டம் அமலுக்கு வந்த நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு அத்தகைய எந்தவொரு ஆணையும் பிறப்பிக்கப்படலாகாது.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆணையும் இயன்றளவு விரைவாக சட்டமன்ற பேரவை முன்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

22. விதிகளை வகுப்பதற்கான அதிகாரம்.- (1) அரசிற்கு, அரசிதழ் அறிக்கை மூலம், இந்த சட்டத்தின் விதிமுறைகளைச் செயல்படுத்துவதற்குத் தேவையான விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாக, மேற்குறிப்பிட்ட அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும், அத்தகைய விதிகளில் பின்வரும் அனைத்திற்கும் அல்லது ஏதேனும் விஷயங்களுக்காக ஏற்பாடு செய்யலாம், அதாவது:-

(எ) நிரந்தரத் தன்மை வாய்ந்த பொது ஆவணங்களை ஏற்றுக்கொள்வதற்கு பிரிவு 3-ன் துணைப்பிரிவு (2)-ல் உட்பிரிவு (பி)-ன் கீழ் உள்ள கால அளவு;

(பி) பிரிவு 6-ன் உட்பிரிவு (பி)-ன் கீழ் பொது ஆவணங்களை காலமுறை ஆய்வு செய்வதற்கான கால அளவு;

(சி) பிரிவு 6-ன் உட்பிரிவு (சி)-ன் கீழ், பொது ஆவணங்களை மதிப்பிடும் முறை;

(டி) பிரிவு 6-ன் உட்பிரிவு (எஃப்)-ன் கீழ், வகைப்படுத்தப்பட்ட பொது ஆவணங்களை வகை நீக்கம் செய்வதற்கான காலமுறை ஆய்வை மேற்கொள்ளும் முறை;

(இ) பிரிவு 6-ன் உட்பிரிவு (கெ)-ன் கீழ், ஆவண அதிகாரி இயக்குநரிடம் ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை;

(எஃப்) பிரிவு 8-ன் துணைப்பிரிவு (1)-ன் கீழ், பொது ஆவணங்களை அழிப்பதற்கான அல்லது அகற்றுவதற்கான முறை மற்றும் நிபந்தனைகள்;

(ஜி) பிரிவு 11-ன் துணைப்பிரிவு (1)-ன் கீழ், தனியார் மூலங்களிலிருந்து ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய முறை;

(எச்) பிரிவு 11-ன் துணைப்பிரிவு (2)-ன் கீழ் வரலாற்று ரீதியாகவோ தேசிய ரீதியாகவோ நிர்வாக ரீதியாகவோ முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களை சான்றளிக்கப்பட்ட ஆராய்ச்சி அறிஞர்களுக்கு வழங்குவதற்கான முறையும் நிபந்தனைகளும்;

(ஐ) பிரிவு 12-ன் துணைப்பிரிவு (1)-ன் கீழ், ஆவணங்களை உருவாக்கும் எந்தவொரு முகமையும், தன் பொறுப்பில் உள்ள பொது ஆவணங்களை அணுகுவதற்கு எந்தவொரு நபருக்கும் அனுமதி வழங்குவதற்கான முறையும் நிபந்தனைகளும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(ஜெ) பிரிவு 12-ன் துணைப்பிரிவு (2)-ன் கீழ், ஆவணங்களை உருவாக்கும் எந்தவொரு முகமையும், தன் பொறுப்பில் உள்ள பொது ஆவணங்களை அணுகுவதற்கு எந்தவொரு நபருக்கும் அனுமதி வழங்குவதற்கான முறையும் நிபந்தனைகளும்;

(கெ) பிரிவு 14-ன் துணைப்பிரிவு (8)-ன் கீழ் வாரியத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படக்கூடிய சலுகைகள்;

(எல்) பரிந்துரைக்கப்பட்டுள்ள அல்லது பரிந்துரைக்கப்படக்கூடிய பிற ஏதேனும் விஷயம்;

(3) இந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் ஒவ்வொரு விதியும், இயற்றப்பட்டவுடன் இயன்றளவு விரைவாக சட்டமன்றம் கூட்டத்தொடரில் இருக்கும்போது, கூட்டத்தொடர் முன்பாக ஒரு கூட்டத்தொடரிலோ அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களிலோ உள்ளடங்கிய மொத்த பதினான்கு நாட்களுக்கு வைக்கப்பட வேண்டும், அவ்வாறு அது எந்த கூட்டத்தொடரில் வைக்கப்படுகிறதோ அந்தக் கூட்டத்தொடரோ அல்லது அதை தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பாக சட்டமன்றம் அந்த விதியில் ஏதேனும் திருத்தம் ஏற்படுத்தவோ அல்லது அந்த விதி இயற்றப்பட வேண்டாம் என முடிவு செய்கின்ற பட்சம், அந்த விதி அதன் பிறகு, அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்ப, திருத்தம் ஏற்படுத்தப்பட்ட வடிவத்தில் மட்டுமே அமலாக்கத்தில் இருக்கவோ அல்லது எந்தவொரு அமலாக்கமும் இல்லாமல் போகும்; எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் திருத்தம் அல்லது இரத்து செய்தல் அந்த விதியின் கீழ் முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் விஷயத்தின் செல்லுபடிதன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இருக்க வேண்டியதாகும்.

23. தற்போதுள்ள ஆணையை இரத்து செய்தல்.- (1) 1976-ஆம் ஆண்டு 11-ஆம் தேதி உயர்கல்வி (எ) துறை வெளியிட்ட அ.உ (எம்.எஸ்) எண் 157/76/உ.க. இதன் மூலம் இரத்து செய்யப்படுகிறது.

(2) அத்தகைய இரத்து இருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட உத்தரவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விஷயம் அல்லது எடுத்த ஏதேனும் நடவடிக்கை இந்த சட்டத்தின் கீழ் செய்யப்பட்டதாகவும் எடுக்கப்பட்டதாகவும் கருதப்படும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் - சி) துறை

அறிக்கை

எண்:60/ச.இ.சி3/2025/சட்டம். திருவனந்தபுரம், 2025 அக்டோபர் 28

1201 துலாம் 11

1947 கார்த்திகம் 6

கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2025-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

கெ.ஜி.சனல் குமார்,
சட்டச் செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2025-ன் 8-வது சட்டம்

2025-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி செஸ் (திருத்த) சட்டம்

2008-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி செஸ்
சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்குரிய

ஒரு

சட்டம்

முன்னுரை.- 2008-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி செஸ் சட்டம் பின்வரும் தேவைகளுக்காக திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதாலும்:-

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:-

1. சுருக்கத் தலைப்பு மற்றும் தொடக்கம்.- (1) இந்த சட்டம் 2025-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி செஸ் (திருத்த) சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது உடன் அமலுக்கு வருவதாகும்.

2. பிரிவு 2-ல் திருத்தம்.- 2008-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி செஸ் சட்டம் (2008-ன் 20) (இதற்குப் பிறகு முதன்மைச்சட்டம் என்று குறிப்பிடப்படும்) பிரிவு 2-ல்,-

(i) தற்போதுள்ள உட்பிரிவு (எ) உட்பிரிவு (எஎ) ஆக மறு எழுத்திடப்பட வேண்டியதும் அவ்வாறு மறு எழுத்திடப்பட்ட உட்பிரிவு (எஎ)க்கு முன்பாக பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதுமாகும், அதாவது;-

''(எ) ''மேல்முறையீட்டு அதிகாரி'' எனில் பிரிவு-12-ன் படியான மேல்முறையீட்டு அதிகாரி என்று பொருள்படும்.'';

(ii) உட்பிரிவு (டி)-க்கு பிறகு பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

''(டிஎ) கோம்பவுண்டிங் ஆபிஸர்'' எனில் பிரிவு 16டி-ன் படி அரசு நியமிக்கும் ஒரு அலுவலர் என பொருள்படும்.''.

3. பிரிவு 16-ல் திருத்தம் .- முதன்மை சட்டத்தின் பிரிவு 16-ல்,-

(i) துணைப்பிரிவு (1)-ல், ''ஆறு மாத காலம் வரையிலான சிறை தண்டனை அல்லது ஐயாயிரம் ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இவை இரண்டும் சேர்ந்ததோ ஆன தண்டனை வழங்கப்பட வேண்டியதாகும்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''இருபத்து ஐயாயிரம் ரூபாய் அபராதம் தண்டனையாக வழங்கப்பட வேண்டியதாகும்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(ii) துணைப்பிரிவு (2)-ல், ''ஆறுமாத காலம் வரையிலான சிறைதண்டனை அல்லது ஐயாயிரம் ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இரண்டையும் சேர்த்து தண்டனை வழங்கப்பட வேண்டியதாகும் என்ற சொற்களுக்கு பதிலாக ''இருபத்தையாயிரம் ரூபாய்'' அபராதம் தண்டனையாக வழங்கப்பட வேண்டியதாகும்.''.

(iii) துணைப்பிரிவு (3)-ல், ''மூன்று மாத காலம் வரையிலான சிறைதண்டனை அல்லது இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இரண்டையும் சேர்த்து தண்டனை வழங்கப்பட வேண்டியதாகும்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''இருபத்தையாயிரம் ரூபாய் அபராதம் தண்டனையாக வழங்கப்பட வேண்டியதாகும்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டியதாகும்;

(iv) துணைப்பிரிவு (4) தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

4. பிரிவு-16-க்கு பிறகு புதிய பிரிவுகள் சேர்த்தல்.- முதன்மை சட்டத்தின் பிரிவு 16-க்கு பிறகு பின்வரும் பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டியதாகும். அதாவது.-

''16 எ. அபராதம் விதிப்பதற்கு முன்னர் வாய்ப்பு வழங்கப்படும்.- இந்த சட்டத்தில் என்னதான் அடங்கியிருந்தாலும், பிரிவு 16-ன் கீழான அபராதத்தை விதிக்க அரசிற்கு, அரசிதழ் அறிக்கை வாயிலாக, தொழில்/கயிறு துறையிலுள்ள இணை இயக்குநர் பதவிக்கு இணையான ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டியதும், அவர் அபராதம் விதிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்பாக மேற்குறிப்பிட்ட துறையின் விதிமுறைகளை பின்பற்ற வியாபாரிக்கு தொண்ணூறு நாட்களுக்கு மிகாத ஒரு காலக்கெடுவை எழுத்துபூர்வமாக நிர்ணயித்து வழங்க வேண்டியதும், மேற்குறிப்பிட்ட காலவரம்பிற்குள் வியாபாரி மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்றியிருந்தால் வியாபாரிக்கு எதிராக அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் தொடங்க கூடாததுமாகும்.

16 பி. அபராதம் செலுத்த தவறும் பட்சம் அதற்கான தண்டனை.- (1) பிரிவு 16-ன் படி அபராதம் விதிக்கப்பட்டுள்ள உத்தரவின் நகலை பெற்ற தேதி முதல் தொண்ணூறு நாட்களுக்குள் அபராதம் செலுத்த தவறும் எந்தவொரு நபரும் ஆறுமாதம் வரையிலான சிறை தண்டனை மற்றும் அபராத தொகையின் இரு மடங்கு அபராதமும் விதிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியதாகும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றமும், முதல் நிலை, மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்கு கீழுள்ள எந்தவொரு நீதிமன்றமும் விசாரிக்கப்படக்கூடாது.

(3) துணைப்பிரிவு (1)-ன் படி தண்டிக்கப்படக் கூடிய ஒரு குற்றமும், அபராதம் விதிக்க அதிகாரப்படுத்தப்பட்டுள்ள அதிகாரியின் முன் அனுமதியுடனும் அவ்வாறான குற்றங்களுக்கு காரணமான அவரது எழுத்துபூர்வ அறிக்கையின் அடிப்படையின்றி எந்த ஒரு நீதிமன்றமும் விசாரிக்கப்படக்கூடாது.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

16 சி. அபராதம் விதிப்பதற்கான அதிகாரியின் அதிகாரம்.- (1) இந்த சட்டத்தில் பிரிவு-16-ன் படியான அபராதத்தை விதிப்பதற்காக பிரிவு 16 ஏ-ன் படி அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரி நிர்ணயிக்கப்பட்ட முறையில் ஒரு விசாரணை நடத்திய பிறகு, இந்த சட்டத்தின்படியான அபராதத்தை விதிக்க வேண்டியதாகும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படியான விசாரணையை மேற்கொள்ளும்போது, அதிகாரிக்கு, விஷயத்தின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து நேரடி அறிவுள்ள எந்தவொரு நபரையும் சாட்சி அளிப்பதற்காகவோ அதிகாரியின் கருத்தில் விசாரணை தொடர்பான விஷயத்திற்கு பயனுள்ளதாகவோ தொடர்புடையதாகவோ உள்ள, ஏதேனும் ஆவணம் சமர்ப்பிப்பதற்காக வரவழைக்கவும், ஆஜராக கட்டாயப்படுத்தவும் அதிகாரம் உள்ளதும் அத்தகைய விசாரணையில் அந்த நபர் குற்றம் செய்துள்ளார் என உணரும்பட்சம், அவர் இந்த சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான ஒரு அபராதத்தை விதிக்க வேண்டும்.

(3) துணைப்பிரிவு (2)-ன் படி அதிகாரியால் வெளியிடப்பட்ட உத்தரவில் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும், அத்தகைய உத்தரவு அவருக்கு தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் மேல்முறையீட்டு அதிகாரியின் முன், பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் அத்தகைய கட்டணத்திலும், ஒரு மேல்முறையீடு வழங்கலாம்.

ஆனால், உரிய நேரத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ய போதுமான காரணத்தால் மேல்முறையீட்டாளர் தடுக்கப்பட்டிருந்தார் என்று மேல்முறையீட்டு அதிகாரி உணரும் பட்சம், நிர்ணயிக்க காலமான முப்பது நாட்களான காலாவரம்பு முடிந்த பிறகு மேல்முறையீட்டு அதிகாரி ஏற்றுக்கொள்ளலாம்.

(4) மேல்முறையீட்டு அதிகாரிக்கு மேல்முறையீட்டில் உள்ள தரப்பினரின் கருத்தை கூறுவதற்கான ஒரு வாய்ப்பை வழங்கிய பின்னர், மேல்முறையீடு பெற்ற தேதி முதல் அறுபது நாட்களுக்குள், எந்த உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது அந்த உத்தரவை உறுதி செய்யவோ மாற்றியமைக்க செய்யவோ ரத்து செய்யவோ செய்வது உகந்தது என அவர் கருதும் அத்தகைய உத்தரவு பிறப்பிக்கலாம்.

(5) அபராதமாக வசூலிக்கப்படும் தொகை மாநிலத்தின் தொகு நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டியதாகும்.

16 டி. குற்றங்களை தள்ளுபடி செய்தல்.- பிரிவு 16 பி-ன் படியான குற்றங்களை தள்ளுபடி செய்ய ப்ரோஸிக்யுஷன் நடவடிக்கைகளுக்கு முன்னரோ பின்னரோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவருக்கு அரசு அறிவிக்கை மூலம் நியமிக்கின்ற தொழில்/கயிறு துறையின் இணை இயக்குநருக்கு இணையான பதவியிலுள்ள கோம்பவுண்டிங் ஆபிஸர் முன் விண்ணப்பம் சமர்பிக்க செய்யவும் மேற்குறிப்பிட்ட துறையின் படி

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

விதிக்கப்பட்டுள்ள அபராத தொகையின் எழுபத்தைந்து சதவீதம் செலுத்தினால் கோம்பவுண்டிங் ஆபிஸர்க்கு தள்ளுபடி செய்யலாம்.

(2) குற்றங்கள் தள்ளுபடி செய்வதற்கான அனைத்து விண்ணப்பங்களும் நிர்ணயிக்கப்படும் படியான அத்தகைய படிவத்திலும், அத்தகைய முறையிலும் வழங்க வேண்டும்.

(3) குற்ற வழக்கு நடவடிக்கைகளுக்கு முன்னர் ஒரு குற்றங்கள் தள்ளுபடி செய்வதாக, அத்தகைய சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டப்பட்டவர் மீது மேற்குறிப்பிட்ட குற்றம் தொடர்பாக எந்தவொரு குற்றவழக்கு விசாரணை நடவடிக்கையும் தொடங்கக்கூடாது.

(4) குற்ற வழக்கு விசாரணை நடவடிக்கைகள் தொடங்கிய பிறகு குற்றங்களை தள்ளுபடி செய்வது நீதிமன்றத்தின் அனுமதியுடன் மட்டுமே இருக்க வேண்டியதும் அத்தகைய தள்ளுபடிக்கு பிறகு குற்றம் சாட்டப்பட்டவர் மேற்கூறிய குற்றத்தில் இருந்து குற்றமற்றவராவதுமாகும்.

(5) குற்றங்கள் தள்ளுபடி செய்வதன் மூலம் கிடைக்கும் தொகை மாநிலத்தின் தொகு நிதியில் வரவு வைக்கப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் - சி) துறை

அறிக்கை

எண்:79/ச.இ.சி3/2025/சட்டம். திருவனந்தபுரம், 2025 அக்டோபர் 29

1201 துலாம் 12

1947 கார்த்திகம் 7

கேரள மாநில சட்டப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2025-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

கெ.ஜி.சனல் குமார்,
சட்டச் செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2025-ன் 9-வது சட்டம்

2025-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி (திருத்த) சட்டம்

1987-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி

சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்குரிய

ஒரு

சட்டம்

முன்னுரை.- 1987-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி சட்டம் இதற்கு பின்வரும் தேவைகளுக்காக மீண்டும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதாலும்:-

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:-

1. சுருக்கத் தலைப்பு மற்றும் தொடக்கம்.- (1) இந்த சட்டம் 2025-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி (திருத்த) சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது உடன் அமலுக்கு வருவதாகும்.

2. பிரிவு 2-ல் திருத்தம்.- 1987-ன் கேரள கயிறு தொழிலாளர்கள் நலநிதி சட்டம் (1987-ன் 34) (இதற்குப் பிறகு முதன்மைச்சட்டம் என்று குறிப்பிடப்படும்).-

பிரிவு 2-ல்,-

(i) தற்போதுள்ள உட்பிரிவு (எ) உட்பிரிவு (எஎ) ஆக மறு எழுத்திடப்பட வேண்டியதும் அவ்வாறு மறு எழுத்திடப்பட்ட உட்பிரிவு (எஎ)க்கு முன்பாக பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்பட வேண்டியதுமாகும், அதாவது;-

''(எ) ''மேல்முறையீட்டு அதிகாரி'' எனில் பிரிவு-11-ன் உட்பிரிவு 4-ன் படி மேல்முறையீட்டு அதிகாரி என்று பொருள்படும்.'';

(ii) உட்பிரிவு (டி)-ற்கும் அதன் கீழுள்ள விளக்கத்திற்கு பிறகும் பின்வரும் உட்பிரிவு சேர்க்க வேண்டியதாகும், அதாவது:-

''(டிஎ) கோம்பவுண்டிங் ஆபிஸர்'' எனில் பிரிவு 17டி-ன் படி அரசு நியமிக்கும் ஒரு அலுவலர் என பொருள்படும்.'';

3. பிரிவு 13-ஐ நீக்குதல்.- முதன்மை சட்டத்தில் பிரிவு -13 ஐ நீக்க வேண்டியதாகும்.

4. பிரிவு 14-ற்கான திருத்தம்.- முதன்மை சட்டத்தில் பிரிவு 14-ல், ''பகிர்ந்து கொடுத்தல்'' என்ற சொற்களுக்கு பிறகு, ''2002-ன் செக்யூரிடைஸேஷன் அன்ட் ரீ கன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பினான்ஷியல் அஸட்ஸ் அன்ட் என்போர்ஸ்மென்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் சட்டத்தில் (2002-ன் 54-வது மத்திய சட்டம்) பிரிவு 26இ-ற்கு உட்பட்டு'' என்ற சின்னங்களும் எண்களும் சொற்களும் அடைப்பு குறியீடுகளும் சேர்க்க வேண்டியதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

5. பிரிவு 17-ற்கான திருத்தம்.- முதன்மை சட்டத்தில் பிரிவு 17-ல்,-

(i) துணைப்பிரிவு (1)-ல் எந்தவொரு நபருக்கும் மூன்று மாதம் வரையான சிறை தண்டனையோ அல்லது ஐநூறு ரூபாய் வரையான அபராதமோ அல்லது இவை இரண்டும் சேர்ந்தோ ஆன தண்டனை வழங்கப்படலாம் என்ற சொற்களுக்கு பதிலாக ''எந்தவொரு நபரும் இந்த சட்டத்தின் படி செலுத்த வேண்டிய அபராத தொகையின் இரு மடங்கு அபராதத்திற்குப் பொறுப்பாவார்'' என்ற சொற்கள் சேர்க்க வேண்டியதாகும்;

(ii) துணைப்பிரிவு (2)-ல் இரண்டு மாதங்கள் வரையான சிறை தண்டனையோ அல்லது நானூறு ரூபாய் வரையான அபராதமோ அல்லது இவை இரண்டும் சேர்ந்தோ ஆன தண்டனை வழங்கப்படலாம்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''இருபத்தைந்தாயிரம் ரூபாய் அபராதத்திற்கு பொறுப்பாவார்'' என்ற சொற்கள் சேர்க்க வேண்டியதாகும்;

(iii) துணைப்பிரிவுகள் (3)-ம், (4)-ம் நீக்க வேண்டியதாகும்.

6. பிரிவு-17-ற்கு பிறகு புதிய பிரிவுகள் சேர்த்தல்.- முதன்மை சட்டத்தில் பிரிவு 17-ற்கு பிறகு பின்வரும் பிரிவுகள் சேர்க்க வேண்டியதாகும். அதாவது.-

''17 எ. அபராதம் விதிப்பதற்கு முன் வாய்ப்பு.- இந்த சட்டத்தில் என்னதான் அடங்கியிருந்தாலும், பிரிவு 17-ன் படி அபராதம் விதிப்பதற்காக அரசிற்கு, அரசிதழில் அறிக்கை மூலம் தொழில்/கயிறு துறையில் புரோஜக்ட் ஆபிஸரின் பதவிக்கு இணையான ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டியதும், அவர் அபராதம் விதிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்பாக மேற்குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு இணங்குவதற்கு தொடர்புடைய நபருக்கு தொண்ணூறு நாட்களுக்கு மிகாத ஒரு காலக்கெடுவை எழுத்துபூர்வமாக நிர்ணயித்து வழங்க வேண்டியதும், மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் நபர் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்றியிருந்தால் அவருக்கு எதிராக அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் தொடங்க கூடாததுமாகும்.

17 பி. அபராதம் செலுத்தாததற்கான தண்டனை.- (1) இந்த சட்டத்தில் பிரிவு 1-ன் படி அபராதம் விதிக்கப்பட்டுள்ள உத்தரவின் நகலை பெற்ற தேதி முதல் தொண்ணூறு நாட்களுக்குள் அபராதம் செலுத்துவதில் வீழ்ச்சி ஏற்பட்டால் எந்தவொரு நபரும் ஆறுமாதம் வரையான சிறை தண்டனையும் அபராத தொகையின் இரு மடங்கு அபராதமும் வழங்கி தண்டிக்கப்பட வேண்டியதாகும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றமும், பஸ்ட் க்ளாஸ், மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்கு கீழுள்ள எந்தவொரு நீதிமன்றமும் விசாரிக்கப்படக்கூடாது.

(3) துணைப்பிரிவு (1)-ன் படி தண்டிக்கப்படக் கூடிய ஒரு குற்றமும், அபராதம் விதிக்க அதிகாரப்படுத்தப்பட்டுள்ள அதிகாரியின் முன் அனுமதியுடனும் அவ்வாறான

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

குற்றங்களுக்கு காரணமான அவரது எழுத்துபூர்வ அறிக்கையின் அடிப்படையின்றி எந்த ஒரு நீதிமன்றமும் விசாரிக்கப்படக்கூடாது.

17 சி. அபராதம் விதிப்பதற்கான அதிகாரியின் அதிகாரம்.- (1) இந்த சட்டத்தில் பிரிவு -17-ன் படி அபராதம் விதிப்பதற்காக இந்த சட்டத்தில் பிரிவு 17 ஏ-ன் படி அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரி நிர்ணயிக்கப்பட்ட முறையில் ஒரு விசாரணை நடத்திய பிறகு, இந்த சட்டப்படியான அபராதம் விதிக்க வேண்டும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி விசாரணை மேற்கொள்ளும்போது, அதிகாரிக்கு விஷயத்தின் உண்மைகளையும் சூழ்நிலைகள் குறித்து நேரடி அறிவுள்ள எந்தவொரு நபரையும் சாட்சி அளிப்பதற்காகவோ அதிகாரியின் கருத்தில் விசாரணையுமாக தொடர்புடைய விஷயத்திற்கு பயனுள்ளதாகவோ தொடர்புடையதாகவோ ஆவதுமான, ஏதேனும் ஆவணம் சமர்ப்பிப்பதற்காகவோ வரவழைக்கவும், ஹாஜராக்க கட்டாயப்படுத்தவும் அதிகாரம் உள்ளதும் அத்தகைய விசாரணையில் அந்த நபர் குற்றம் செய்துள்ளார் என்று திருப்தியடைந்தால், அவர் இந்த சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான ஒரு அபராதம் விதிக்க வேண்டும்.

(3) துணைப்பிரிவு (2)-ன் படி அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும், அத்தகைய உத்தரவு அவருக்கு தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் மேல்முறையீட்டு அதிகாரியின் முன் பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் அத்தகைய கட்டணத்திலும் ஒரு மேல்முறையீடு வழங்கலாம்.

எனில் உரிய நேரத்தில் மேல்முறையீடு வழங்குவதிலிருந்து போதுமான காரணத்தால் மேல்முறையீட்டாளர் தடுக்கப்பட்டிருந்தார் என்று மேல்முறையீட்டு அதிகாரி திருப்தி அடையும் நிலையில், பரிந்துரைக்கப்பட்ட முப்பது நாட்கள் காலாவதியான பிறகும் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடும் மேல் முறையீட்டு அதிகாரி ஏற்றுகொள்ளலாம்.

(4) மேல்முறையீட்டு அதிகாரிக்கு மேல்முறையீட்டில் உள்ள தரப்பினரை கேட்பதற்கான ஒரு வாய்ப்பளித்த பின்னர், மேல்முறையீடு பெற்ற தேதி முதல் அறுபது நாட்களுக்குள், எந்த உத்தரவிற்கு எதிராகவோ மேல்முறையீடு வழங்கப்பட்டுள்ளது அந்த உத்தரவை உறுதிபடுத்தியோ மாற்றியமைத்தோ ரத்து செய்தோ செய்வது பொருத்தமென்று அவர் கருதும் அத்தகைய உத்தரவு பிறப்பிக்கலாம்.

(5) அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

17 டி. குற்றங்களை தள்ளுபடி செய்தல்.- இந்த சட்டத்தில் பிரிவு 17 பி-ன் படி குற்றங்கள் தள்ளுபடி செய்ய ப்ரோஸிக்யுஷன் நடவடிக்கைகளுக்கு முன்னரோ பின்னரோ

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

குற்றம் சாட்டப்பட்டவரை அரசு அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை மூலம் நியமிக்கின்ற தொழில்/கயிறு துறையின் ஜோயின்ட் டைரக்டர் பதவிக்கு இணையான கோம்பவுண்டிங் ஆபிஸர் முன் விண்ணப்பம் சமர்பிக்கலாம். மேற்குறிப்பிட்ட துறையில் நிபந்தனை செய்த படி விதிக்கப்பட்டுள்ள அபராதத்தின் எழுபத்தைந்து சதவிகிதம் செலுத்தினால் கோம்பவுண்டிங் ஆபிஸர்க்கு தள்ளுபடி செய்யலாம்.

(2) குற்றங்கள் தள்ளுபடி செய்வதற்கான அனைத்து விண்ணப்பங்களும் நிர்ணயிக்கப்படும் அத்தகைய படிவத்திலும், அத்தகைய முறையிலும் வழங்க வேண்டும்.

(3) புரோஸிக்யூஷன் நடவடிக்கைகளுக்கு முன்னாக ஒரு குற்றம் தள்ளுபடி செய்வதெனில், அத்தகைய சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டப்பட்டவரின் மேல் மேற்குறிப்பிட்ட குற்றம் தொடர்பாக எந்தவொரு பிரோஸிக்யுஷன் நடவடிக்கையும் தொடங்கக்கூடாது.

(4) பிரோஸிக்யுஷன் நடவடிக்கைகள் தொடங்கிய பிறகு ஒரு குற்றம் தள்ளுபடி செய்வது நீதிமன்றத்தின் அனுமதியுடன் மட்டுமே இருக்க வேண்டியதும் அத்தகைய தள்ளுபடிக்கு பிறகு குற்றம் சாட்டப்பட்டவர் குற்றமற்றவராவதுமாகும்.

(5) குற்றங்கள் தள்ளுபடி செய்வதன் மூலம் கிடைக்கும் தொகை மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதியில் வரவு வைக்கப்பட வேண்டும்.

17 இ. எந்தவொருவரிடமிருந்து கிடைக்க வேண்டிய பணம் வசூலிக்கும் முறை.- இந்த சட்டமோ அதன் கீழிலுள்ள விதிகள் அல்லது திட்டத்தின் படியோ எந்தவொருவரிடமும் செலுத்த வேண்டிய ஏதேனும் தொகை, வட்டியுடன், தற்போது நடைமுறையிலுள்ள (1968-ன் 15) விதிகளின் படி பொது வரி செலுத்த வேண்டிய தொகை என்ற முறையில் வசூலிக்கலாம்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -எ) துறை

அறிக்கை

எண்:121/ச.இ.எ 2/2025/சட்டம். திருவனந்தபுரம், 2025 நவம்பர் 7
1201 துலாம் 21
1947 கார்த்திகம் 16.

கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2025-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

கெ.ஜி.சனல் குமார்,
சட்ட செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2025-ன் **14**-வது சட்டம்

2025-ன் கேரள சங்கங்கள் பதிவுச் சட்டம்

கேரள மாநிலத்தில் கலை, இலக்கியம், அறிவியல், கல்வி, தொண்டு மற்றும் விளையாட்டு/ சங்கங்களின் பதிவு தொடர்பான/ பதிவு தொடர்பான சட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் / கலை, இலக்கியம், அறிவியல், கல்வி, தொண்டு மற்றும் விளையாட்டு செயல்பாடுகளின் / மேம்பாட்டிற்காக, பயனுள்ள அறிவை பரப்புவதற்காக, இயற்கை வளங்கள் மற்றும் அடிப்படை வசதிகளின் மேம்பாட்டிற்காக சங்கங்களை பதிவு செய்வதற்கும் அவையுடன் தொடர்புடையதோ அவைக்கு ஏற்புடையதோ ஆன பிற விஷயங்களுக்குமாக ஏற்பாடு செய்வதற்கான

ஒரு

சட்டம்

முன்னுரை.- கேரள மாநிலத்தில் கலை, இலக்கியம், அறிவியல், கல்வி, தொண்டு மற்றும் விளையாட்டு சங்கங்களின் பதிவு தொடர்பான சட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் கலை, இலக்கியம், அறிவியல், கல்வி தொண்டு மற்றும் விளையாட்டு செயல்பாடுகளின் மேம்பாட்டிற்காக, பயனுள்ள அறிவை பரப்புவதற்காக, இயற்கை வளங்கள் மற்றும் அடிப்படை வசதிகளின் மேம்பாட்டிற்காக சங்கங்களை பதிவு செய்வதற்கும் அவையுடன் தொடர்புடையதோ அவைக்கு ஏற்புடையதோ ஆன பிற விஷயங்களுக்குமாக ஏற்பாடு செய்வது உகந்ததாக இருப்பதால்;

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் பின்வரும் படியாக சட்டம் இயற்றப்படுகிறது:-

அத்தியாயம் I

தொடக்கம்

1. சுருக்கத்தலைப்பு மற்றும் தொடக்கம்:- (1) இந்த சட்டம் 2025-ன் கேரள சங்கங்கள் பதிவு சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இந்த அரசு, அரசிதழ் அறிக்கை வாயிலாக, நிர்ணயிக்கப்படும் தேதியில் அமலுக்கு வருவதாகும்.

2. விளக்கங்கள்.- இந்த சட்டத்தில், சந்தர்ப்பம் பிற வகையில் தேவைப்படாத பட்சம்,-

(எ) ''நிர்வாகி'' என்றால் இந்த சட்டத்தின் பிரிவு 39-ன் படி நியமிக்கப்படும் நிர்வாகி என பொருள்படும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(பி) ''நாள்'' என்றால் சம்மந்தப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரியின் வேலை நாள் எனப் பொருள்படும்;

(சி) ''நிர்வாக குழு'' என்றால் சங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் படி அதன் நிர்வாகத்தை ஒப்படைக்கப்பட்ட குழு அல்லது நிர்வாகிகள், இயக்குனர்கள் அல்லது பிற ஏதேனும் அமைப்பு எனப்பொருள்படும்;

(டி)''அரசு'' என்றால் கேரள அரசு எனப்பொருள்படும்;

(இ)''பதிவுத்துறை தலைவர்'' என்றால் 1908-ன் பதிவு சட்டத்தின் (1908-ன் 16-வது மத்திய சட்டம்) பிரிவு 3-ன் படி நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரி எனப் பொருள்படும்;

(எஃப்)''சங்கத் தலைவர்'' என்றால் இந்த சட்டத்தின் படி ஒரு சங்க தலைவருக்குரிய கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றும் தேவைக்காக, அரசு, அரசிதழ் அறிக்கை வாயிலாக, குறிப்பிடப்பட்ட பகுதிக்காக நியமிக்கப்படும் ஒரு அதிகாரி என பொருள்படுவதும், அல்லது எந்த ஒரு அதிகாரியும் நியமிக்கப்படாத பட்சம் பதிவாளர், சங்க ஆய்வாளராக இருப்பார்;

(ஜி)''உறுப்பினர்'' என்றால் ஒரு சங்கத்தில் அதன் விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் துணை விதிகளுக்கு ஏற்ப உறுப்பினர் பதவியில் சேர்க்கப்பட்டுள்ளதும் வரித்தொகை செலுத்துவதற்கான உறுப்பினர் பதிவேட்டில் கையொப்பமிடவோ, அத்தகைய விதிகள், ஒழுங்குமுறைகள் அல்லது துணை விதிகளில் ஏற்பாடு செய்த படி வேலை இராஜினாமா செய்யாத அல்லது நீக்கம் செய்யப்படாத ஒரு நபர் எனப் பொருள்படும்;

விளக்கம்.- மூன்று மாதங்களுக்கு மேலான காலயளவில் வரித்தொகை நிலுவை உள்ள எந்தவொரு நபரும் இந்த சட்டத்தின் கீழுள்ள நடவடிக்கைகளில் வாக்களிக்கும் தகுதி அற்றவராகவும் மேலும் அவர் ஒரு உறுப்பினராகவும் கருதப்பட மாட்டார்;

(எச்) ''அமைப்பு குறிப்புகள்'' என்றால் இந்த சட்டத்தின் பிரிவு 6-ன் படியான சங்கத்தின் சங்க அமைப்பு குறிப்புகள் எனப்பொருள்படும்;

(ஐ)''பரிந்துரைக்கப்பட்ட'' என்றால் இந்த சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளால் பரிந்துரைக்கப்பட்ட எனப்பொருள்படும்;

(ஜெ)''பதிவாளர்'' என்றால் இந்த சட்டத்தின் படி, ஒரு பதிவாளரின் கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றும் தேவைக்காக, அரசு, அரசிதழ் அறிக்கை வாயிலாக, குறிப்பிடும் படியான பகுதியில் அதிகாரம் பெற்ற ஒரு அதிகாரி எனப்பொருள்படுவதும், அவ்வாறு ஒரு அதிகாரி நியமிக்கப்படாத பட்சம் பதிவு துறை தலைவர், பதிவாளரின் கடமைகளை செய்வார்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(கெ)''சங்கம்'' என்றால் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாக கருதப்படும் ஒரு சங்கம் எனப்பொருள்படும்;

(எல்)''ஆண்டு'' என்றால் ஜனவரி மாதம் 1-ஆம் தேதி ஆரம்பித்து டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி முடிவடையும் ஆண்டு அல்லது பதிவாளரின் முன் அனுமதியுடன் ஏதேனும் சங்கம் அல்லது ஏதேனும் இனச்சங்கங்களின் விஷயத்தில் அவற்றின் கணக்குகள் பிற ஏதேனும் ஒரு தேதிக்கு தீர்மானிக்கப்பட்டிருந்தால் அவ்வாறான தேதியில் துவங்கி முடிவடையும் ஆண்டு எனப்பொருள்படும்.

அத்தியாயம் 2
சங்கங்களின் பதிவு

3. சட்டம் பொருந்தும் சங்கங்கள்.- பின்வரும் நோக்கங்களுக்கான சங்கங்கள், அதாவது.-

(i) தொண்டு பணிகளை ஊக்குவித்தல்;

(ii) கல்வி, கலாச்சாரம், அறிவியல், இலக்கியம் அல்லது கலை ஆகியவைகளை ஊக்குவித்தல்;

(iii) விளையாட்டை ஊக்குவித்தல்;

(iv) வணிகம் மற்றும் தொழில் ஆகியவற்றுடன் தொடர்புடையதும் பிற ஏதேனும் பயனுள்ள அறிவை வழங்குதல் மற்றும் மேம்படுத்துதல்;

(v) உறுப்பினர்களின் பொது பயன்பாட்டிற்காக அல்லது பொது மக்களுக்காக நூலகங்கள் அல்லது வாசிப்பு அறைகள் அல்லது பொது அருங்காட்சியகங்கள், கலைக் கூடங்கள் மற்றும் பிற கலை தொடர்பான நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்;

(vi) இயற்கை வளங்கள், நிலம், ஆற்றல், நீர் மற்றும் வனம் ஆகியவை மற்றும் அரசு அவ்வப்போது அறிக்கை செய்யக்கூடிய பிற அடிப்படை வசதிகள் ஆகியவற்றின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பிற்காக;

(vii) இயற்கை வரலாறு, இயந்திரவியல் அல்லது தத்துவவியல் கண்டுபிடிப்புகள், கருவிகள் அல்லது வடிவமைப்புகள் ஆகியவற்றின் சேகரித்தலும்

அத்தகைய சங்கங்கள் தங்களிடம் இலாபம் அல்லது பிற வருவாய் உண்டாகும் பட்சம், அவை அவர்களின் அத்தகைய கொள்கைகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அவர்களின் உறுப்பினர்களுக்கு இடையே ஏதேனும் பங்குவீதம் செலுத்தப்படாமல் அல்லது ஏதேனும் வருவாய் அல்லது இலாபம் விநியோக்கப்படவில்லை எனில் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யலாம்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

4. பதிவு செய்வதற்கான நிபந்தனை.- அரசு உறுப்பினராகவுள்ள ஒரு சங்கம் உட்படயுள்ள எந்தவொரு சங்கமும், பதினெட்டு வயது நிறைவடைந்த குறைந்த பட்சம் ஏழு உறுப்பினர்கள் இல்லாமல் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் கூடாததும் உறுப்பினர்கள் இந்தியக் குடிமக்களாக இருத்தல் வேண்டும்.

5. சங்கங்களை உருவாக்கும் முறை.- பிரிவு 3-ல் குறிப்பிட்டுள்ள ஏதேனும் நோக்கத்திற்காக ஒன்றிணையும் அல்லது சேரும் உறுப்பினர்களுக்கு, பிரிவு 4-ன் விதிமுறைகளுக்கு உட்பட்டு, சங்க அமைப்பு குறிப்பில் அவர்களின் பெயர்களை சேர்த்து பதிவு தொடர்பான இந்த சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், ஒரு சங்கத்தை உருவாக்கலாம்.

6. சங்க அமைப்பு குறிப்புகள்.- (1) ஒவ்வொரு சங்கத்தின் சங்க அமைப்பு குறிப்பில் பின்வரும் விவரங்களை கொண்டிருக்க வேண்டும், அதாவது:-

(i) சங்கத்தின் பெயர்;

(ii) சங்கத்தின் நோக்கங்கள்;

(iii) சங்கத்தின் செயல்பாட்டு பகுதி;

(iv) நிர்வாகிகள், குழு, இயக்குனர்கள் அல்லது சங்கத்தின் விதிகளின் படி அதன் விஷயங்களை செயல்படுத்தும் நிர்வாக குழுவின் உறுப்பினர்களின் பெயர், விலாசம், தொழில், அரசு அங்கீகரித்த அடையாள அட்டை எண்;

(v) சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள இடம்.

(2) சங்கத்தின் அமைப்பு குறிப்புகளுடன் உறுப்பினர் தகுதி வழங்குதல், அதன் பொதுக்கூட்டங்கள், உறுப்பினர்கள் வாக்களித்தது உட்பட அத்தகைய கூட்டங்களின் நடவடிக்கை முறைகள், நிர்வாக குழு, நிர்வாக குழுவின் கூட்டங்களின் நடவடிக்கை முறைகள் ஆகியவை தொடர்பான விதிமுறைகள் உட்படுகின்ற சங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

(3) சங்கத்தின் குறிப்புகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பத்திகளாக பிரித்து தொடர்ச்சியாக எண்ணிட்டு அச்சிடப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ இருக்க வேண்டியதும், குறிப்பில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தனது முகவரி, விவரம், அரசால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை எண், வயது மற்றும் தொழில் ஏதேனும் இருந்தால் ஆகியவற்றையும் உட்படுத்த வேண்டும். அவர் குறைந்த பட்சம் ஒரு சாட்சியின் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும். சாட்சி அந்த நபரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி தனது முகவரி, விவரம், அரசால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை எண் மற்றும் தொழில் ஏதேனும் இருந்தால் ஆகியவற்றையும் உட்படுத்த வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

7. விரும்பதகாத பெயர்களின் சங்கங்கள் பதிவு செய்தல் கூடாததாகும்.- பதிவாளரின் கருத்துப்படி, விரும்பத்தகாத அல்லது தற்போது பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் பெயருடன் ஒத்த ஒரு பெயரின் பிற எந்தவொரு சங்கமும் பதிவு செய்யக்கூடாது.

8. சங்கங்களின் பதிவு.- (1) பதிவு செய்வதற்காக, பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் கட்டணம் உட்பட சங்கத்தின் சங்க அமைப்பு குறிப்புகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பதிவாளர் முன்னில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) இந்த சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளில் அனைத்து விதிமுறைகளும் பின்பற்றப்பட்டுள்ளன என பதிவாளர் திருப்தியுறும் பட்சம், அவர் சங்க அமைப்பு குறிப்புகள், விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை வைத்து கொண்டு ஏழு நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டியதும், முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தனது கையொப்பம் மற்றும் முத்திரையை பதித்து சான்றிதழை வழங்க வேண்டியதாகும்.

(3) பதிவாளர், சங்கத்தை பதிவு செய்ய மறுக்கும் பட்சம், மேற்கூறிய விவரங்களை முப்பது நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். அத்தகைய அறிவிப்பு கிடைத்த தேதி முதல் அறுபது நாட்களுக்குள் மேற்கூறிய உத்தரவுக்கு எதிராக பதிவுத்துறை தலைவர் முன்னில் ஒரு மேல்முறையீடு செய்யலாம்:

ஆனால், அத்தகைய மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படாத சந்தர்ப்பங்களில் நியாயமான காரணத்தை உணர்த்தும் பட்சம், காலதாமதத்தை மன்னித்து மேல்முறையீட்டு காலவரையை முப்பது நாட்களுக்கு மிகாமல் நீடித்து வழங்க அதிகாரிக்கு அதிகாரம் இருப்பதாகும்.

9. தற்போதுள்ள சங்கங்களுக்கான செல்லுபடியாதல் தன்மை.- திருவிதாங்கூர் - கொச்சி இலக்கியம், அறிவியல், தொண்டு சங்கங்கள் பதிவு செய்வதற்கான சட்டம் (1955-ன் 12) அல்லது 1860-ன் சங்கங்கள் பதிவு சட்டம் (1860-ன் 21-வது மத்திய சட்டம்) படி பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாக கருதப்படுவதும், இந்த சட்டத்தின் தொடக்க தேதியில் ரிட்டர்ன் உரிய நேரத்தில் தாக்கல் செய்து பதிவு தற்போது அமலில் இருப்பதுமான அனைத்து சங்கங்களும் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்ததாக கருதப்பட வேண்டும்:

எனில், இந்த சட்டத்தின் தொடக்க தேதியில் ஏதேனும் சங்கம் உரிய நேரத்தில் ரிட்டர்ன் தாக்கல் செய்யாத சந்தர்ப்பங்களில் அதை தாக்கல் செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட காலவரை அரசுக்கு, அறிக்கை வாயிலாக பரிந்துரைக்கலாம்.

10. சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம்.- (1) ஒரு சங்கம், அது பதிவு செய்யப்பட்ட தேதி முதல் இருபத்து ஒன்று நாட்களுக்குள், அனைத்து கடித தொடர்புகள்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

மற்றும் அறிவிப்புகள் அனுப்புவதற்காக ஒரு பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மாநிலத்தில் இருக்க வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள இடம் மற்றும் அவற்றிற்கு ஏதேனும் மாற்றம் ஏற்பட்டுள்ளதெனில் அவை தொடர்பான விவரம், அதது காரியம் போல், சங்கம் பதிவு செய்த தேதி முதல் அல்லது அவ்வாறு மாற்றம் ஏற்பட்ட தேதி முதல் இருபத்து ஒன்று நாட்களுக்குள் பதிவாளருக்கு சங்கத்தின் நிர்வாக குழு தெரிவிக்க வேண்டியதும் பதிவாளர் அதை பதிவு செய்ய வேண்டியதுமாகும்.

(3) இந்த பிரிவின் விதிமுறைகளை கடைபிடிப்பதில் ஒரு சங்கத்தின் நிர்வாக குழு தவறும் பட்சம், ஆயிரம் ரூபாய்க்கு குறையாமலும் பத்தாயிரம் ரூபாய் வரையிலுமான அபராதம் செலுத்துவதற்கு நிர்வாக குழு பொறுப்புடையவராவர்.

11. சங்க அமைப்பு குறிப்புகளுக்கான திருத்தம்.- (1) சங்கத்தின் நிர்வாக குழுவிற்கு தேவையென கருதும் பட்சம், சங்கத்தின் சங்க அமைப்பு குறிப்புகளை திருத்தம் செய்வதற்காக அறிவுரை பரிந்துரை செய்யப்பட்டபடி ஒரு அறிக்கையாக உறுப்பினர்களுக்கு விநியோக்க வேண்டியதும் மேற்குறிப்பிட்ட திருத்தத்தை பரிசீலிப்பதற்காக விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப ஒரு சிறப்பு பொதுகூட்டத்தை சங்கம் கூட்ட வேண்டும்:

ஆனால் அத்தகைய எந்தவொரு திருத்த அறிவுரையும், அதை பரிசீலிக்கப்படுவதற்காக கூட்டப்பட்ட சிறப்பு பொது கூட்டம் தீர்மானிக்கப்பட்ட தேதிக்கு இருபத்து ஒன்று நாட்களுக்கு முன்னதாகவே அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிப்பாக வழங்கவோ தபால் மூலமாகவோ அல்லது மின்னணு முறையிலோ அனுப்பபடாத பட்சமும், வாக்களிக்க தகுதியுடைய உறுப்பினர்களில் நேரில் கலந்து கொண்ட அங்கங்களினுடையவும் பதிலாக வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் அவர்களினுடையும் நான்கில் மூன்று பங்கு உறுப்பினர்கள் ஹாஜராகாத பட்சமும் அவர்களின் வாக்களிப்பு பெரும்பான்மையின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படாதபட்சமும், அந்த கூட்டத்திற்கு முப்பது நாட்களுக்கு பிறகு கூட்டப்படும் ஒரு இரண்டாவது சிறப்பு பொது கூட்டத்தில் அதற்கு இணையான பெரும்பான்மையில் ஒப்பு கொள்ளாத பட்சமும், அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படுவதில்லை.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி அங்கீகரிக்கப்பட்ட சங்க அமைப்பு குறிப்புகளின் ஒவ்வொரு திருத்தமும் அது அங்கீகரிக்கப்பட்டது முதல் முப்பது நாட்களுக்குள் பதிவாளர் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதும், பதிவாளர் அத்தகைய திருத்தம், இந்த சட்டம் மற்றும் அதன் கீழ் உள்ள விதிகளின் விதிமுறைகளுக்கு ஏற்புடையதென கருதும் பட்சம், பரிந்துரைக்கப்படலாமெனும் படியான, கட்டணத்தை

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வசூலித்து தாக்கல் செய்யப்படுவதும் தாக்கல் செய்யப்பட்ட தேதி முதல் அது அமலுக்கு வருவதாகும்:

ஆனால், அவ்வாறு பதிவு செய்யப்படாத பட்சம் அத்தகைய திருத்தங்களுக்கு எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தாது.

மட்டுமல்லாமல், அத்தகைய திருத்தத்தை உரிய நேரத்தில் தாக்கல் செய்யாததற்கு நியாயமாக காரணம் இருப்பதாக பதிவாளருக்கு திருப்தி ஏற்படும் பட்சம், கட்டணத் துடன், பரிந்துரைக்கப்பட்டபடி, ஆயிரம் ரூபாய்க்கு மிகாத தொகை செலுத்தி அதை தாக்கல் செய்யலாம்.

(3) துணைப்பிரிவு (2)-ன் கீழ் சங்க அமைப்பு குறிப்புகளின் திருத்தம் தாக்கல் செய்வதை நிராகரிக்கும் பட்சம் நிராகரிக்கும் அறிவிப்பு கிடைத்த தேதி முதல் அறுபது நாட்களுக்குள் பதிவாளர் பதிவுத்துறை தலைவர் முன்னிலையில் ஒரு மேல்முறையீட்டை தாக்கல் செய்யலாம்.

ஆனால், அவ்வாறு மேல்முறையீட்டை சமர்ப்பிக்காத சந்தர்ப்பங்களில், நியாயமான காரணம் இருப்பதாக திருப்தியுறும் பட்சம் காலதாமதத்தை மன்னித்து மேல்முறையீட்டு காலாவதியை முப்பது நாட்களுக்கு மிகாத வகையில் நீடித்து வழங்க மேல்முறையீட்டு அதிகாரிக்கு அதிகாரம் இருப்பதாகும்.

(4) பதிவுத் துறை தலைவர் நிராகரிக்கும் ஆணைக்கு எதிராக நிராகரிப்பு அறிவிப்பு கிடைத்த தேதி முதல் முப்பது நாட்களுக்குள் அரசுக்கு ஒரு திருத்த மனுவை தாக்கல் செய்யலாம்.

(5) அரசு தாமாகவே துணைப்பிரிவு (3)-ன் படி மேல்முறையீடு தாக்கல் செய்யப்படாத விஷயத்திலோ அல்லது மேல்முறையீட்டை தீர்ப்பாக்கி பதிவுத்துறை பிறப்பித்த உத்தரவிலோ தகுந்த உத்தரவை நிறைவேற்றலாம்.

12. விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் திருத்தம்.- (1) ஒரு சங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் விதிமுறைகளில் அவைக்காக இருபத்தி ஒன்று நாட்களுக்கு முன்பாக சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும், பரிந்துரைக்கப்படலாமெனும்படி, அறிவிப்பு வழங்கிய பிறகு, கூட்டப்பட்ட ஒரு சிறப்பு கூட்டத்தில் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின் மூலம் திருத்தம் செய்யலாம்:

ஆனால் அத்தகைய எந்தவொரு தீர்மானமும், வாக்களிக்க உரிமையுள்ள மொத்த உறுப்பினர்களின் நான்கில் மூன்றோ அல்லது அதற்கு அதிகமான உறுப்பினர்களின் ஆஜரினுடையவும் நேரடியாக ஆஜராகியவர்களினுடையவும் பதிலாக வாக்களிக்க உரிமை அளிக்கப்பட்டிருந்தால் அவர்களின் வாக்களிப்பு பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்படாத பட்சம் அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படுவதில்லை.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(2) துணைப்பிரிவு (1)-ன் படி அங்கீகரித்த திருத்தம் தொடர்பான அனைத்து தீர்மானமும் அது அங்கீகரிக்கப்பட்டது முதல் முப்பது நாட்களுக்குள் பதிவாளர் முன்னில் சமர்ப்பிக்க வேண்டியதும், பதிவாளருக்கு அத்தகைய திருத்தம் இந்த சட்டத்திலும் அதன் கீழுள்ள விதிகளிலும் விதிமுறைகளுக்கு ஏற்புடையதென திருப்தியுறும் பட்சம் பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி திருத்த தாக்கல் செய்யப்படுவதும் மேற்குறிப்பிட்ட திருத்தம் அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட தேதி முதல் அமலுக்கு வருவதுமாகும்:

ஆனால், அவ்வாறு தாக்கல் செய்யப்படாத பட்சம், அத்தகைய திருத்தங்களுக்கு எந்தவொரு தீர்மானமும் இருப்பதில்லை:

அதுமட்டுமல்லாமல், அத்தகைய திருத்தம் உரிய நேரத்தில் தாக்கல் செய்ய முடியாமல் போனதற்கு நியாயமான காரணத்தை பதிவாளர் உணரும் பட்சம் கட்டணத்துடன் ஆயிரம் ரூபாய்க்கு மிகாத அபராத தொகையை செலுத்தி அதை தாக்கல் செய்யலாம்.

(3) துணைப்பிரிவு (2)-ன் படியான திருத்தம், தாக்கல் செய்வதை பதிவாளர் நிராகரிக்கும் பட்சம் அவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ள அறிவிப்பு கிடைத்த தேதி முதல் அறுபது நாட்களுக்குள் பதிவுத்துறை தலைவர் முன்னிலையில் ஒரு மேல்முறையீட்டை தாக்கல் செய்யலாம்:

ஆனால் அவ்வாறு மேல்முறையீட்டை சமர்பிக்காத விஷயத்தில் நியாயமான காரணத்தை உணரும்பட்சம் காலதாமதத்தை மன்னித்து மேல்முறையீட்டு காலாவதி முப்பது நாட்களுக்கு மிகாத வகையில் நீடித்து வழங்குவதற்கு மேல்முறையீட்டு அதிகாரிக்கு அதிகாரம் இருப்பதாகும்.

(4) பதிவுத்துறை தலைவர் நிராகரிக்கும் உத்தரவுக்கு எதிராக நிராகரிப்பு அறிவிப்பு கிடைத்த தேதி முதல் முப்பது நாட்களுக்குள் அரசுக்கு ஒரு மனுவை தாக்கல் செய்யலாம்.

(5) அரசு தாமாகவே துணைப்பிரிவு (1)-ன் படி மேல்முறையீடு சமர்ப்பிக்கப்படாத விஷயத்திலோ மேல்முறையீட்டை தீர்ப்பாக்கி பதிவுத்துறை தலைவர் பிறப்பித்த உத்தரவிலோ தகுந்த உத்தரவை நிறைவேற்றலாம்.

13. சங்கத்தின் சொத்துக்களை உரிமையாக்குதல்.- இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் அசையும் அசையா சொத்துக்கள் பிற வகையில் ஏற்பாடு செய்யப்படாத பட்சம் நிர்வாக குழுவின் பெயரில் ஒப்படைக்கப்பட்டதாக கருதப்பட வேண்டியதும் அனைத்து சிவில் மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளிலும் அத்தகைய சங்கத்தின் நிர்வாக குழுவின் சொத்தாக வகைப்படுத்தப்படலாம்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

14.உறுப்பினர்களின் பதிவேட்டை சங்கம் பராமரித்திட வேண்டும்.- (1) ஒவ்வொரு சங்கமும் அதன் உறுப்பினர்கள் தொடர்பான பின்வரும் விவரங்கள் அடங்கும் ஒரு பதிவேட்டை தயார் செய்து பராமரித்திட வேண்டும், அதாவது:-

(எ) அங்கங்களின் பெயர், முகவரி மற்றும் தொழில்;

(பி) உறுப்பினர் தகுதி கிடைக்கப்பெற்ற தேதி;

(சி) உறுப்பினர் தகுதி முடிவடைந்த தேதி.

(2) இந்த பிரிவின் விதிமுறைகளை பின்பற்றுவதில் தவறிழைக்கும் பட்சம், பரிந்துரைக்கப்பட்ட படி, ஆயிரம் ரூபாய்க்கு மிகாத தொகையை அபராதமாக செலுத்த சங்கத்தின் நிர்வாக குழுவின் பொறுப்பாகும்.

அத்தியாயம் 3

பொது கூட்டம் மற்றும் வரவு செலவு கணக்குகளை சமர்ப்பித்தல்

15. பொது கூட்டம்.- (1) இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கமும் ஒவ்வொரு ஆண்டும் வருடாந்திர பொது கூட்டத்தை கூட்ட வேண்டியதும் அதில் சங்கத்தின் நிர்வாகம் குறித்த முந்தைய ஆண்டின் வருடாந்திர செயல்பாட்டு அறிக்கை தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலை அறிக்கை வரவு செலவு கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை ஆகியவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

ஆனால், பதிவாளர், நிர்வாக குழு சமர்ப்பிக்கும் சிறப்பு காரணத்தால், அவ்வாறு திருப்தியுறும் பட்சம், ஒரு வருடாந்திர பொது கூட்டத்தை கூட்டுவதற்கான காலயளவை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடித்து, பரிந்துரைக்கப்படலாமெனும் படியான கட்டணத்தை வசூலித்து, நீடித்து வழங்கலாம்:

அதுமட்டுமல்லாமல், மேல் கூறப்பட்டுள்ள விஷயங்கள் தவிர, இரண்டு வருடாந்திர பொதுக்கூட்டங்கள் இடையிலான காலயளவு பதினைந்து மாதம் மிகக் கூடாது.

(2) அவ்வாறு நடத்தப்படும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில், சங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள படி, நிர்வாக குழுவிற்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டியதும், நிர்வாக குழுவில் குறைந்தது மூன்று உறுப்பினர்கள் இருக்க வேண்டியதுமாகும்.

(3) சங்கம் பதிவு செய்த இருபத்து ஒன்று நாட்களுக்குள் சங்கத்தின் முதல் நிர்வாக உறுப்பினர்களின் பட்டியலை பதிவாளர் முன்பாக சமர்ப்பிக்க வேண்டியதும், வருடாந்திர பொதுக்கூட்டம் நடத்தப்பட்ட தேதி முதல் இருபத்து ஒன்று நாட்களுக்குள்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

நிர்வாக குழு உறுப்பினர்களின் பட்டியலையும் தணிக்கை செய்து வருமானம் மற்றும் செலவின கணக்குகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆனால், ஏதேனும் காரணத்தால் நிர்வாக குழுவின் பட்டியல் மற்றும் தணிக்கை செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவின கணக்குகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்க முடியாமல் போகும் விஷயத்தில், பரிந்துரைக்கப்படலாமெனும் படி, ஆயிரம் ரூபாய்க்கு அதிகரிக்காத தொகையை அபராதமாக செலுத்தி அத்துடன் அதை தாக்கல் செய்யலாம்.

(4) ஒவ்வொரு சங்கமும், பொதுக் கூட்டத்தின் அனைத்து நடவடிக்கை முறைகளையும் குறித்த, கூட்ட நடவடிக்கை முறைகள் அதற்காக பராமரிக்கப்பட்டுள்ள புத்தகத்தில் பதிவு செய்து பராமரிக்க வேண்டியதும், அத்தகைய கூட்ட நடவடிக்கை முறைகள், கூட்டத்தின் பிரசிடெண்டு அல்லது தலைவர் கையொப்பம் இடவேண்டும்.

(5) நிர்வாக குழுவின் பிரசிடெண்டு அல்லது தலைவர் சங்கத்தின் மொத்த உறுப்பினர்களில், வாக்களிப்பு உரிமை உள்ள உறுப்பினர்களின் பத்தில் ஒரு பங்கு உறுப்பினர்களின் கோரிக்கை படி, அவர் எந்த விஷயத்திற்காக கூட்டம் கூட்டப்படுகிறது என்பதை எழுத்துபூர்வமாக எழுதி வழங்கும் பட்சம், அத்தகைய கோரிக்கை எழுத்துபூர்வம் கிடைக்கப்பெற்ற பத்து நாட்களுக்குள் அதை பரிசீலிப்பதற்காக ஒரு கூட்டம் முறையே கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதும், அத்தகைய கூட்டம் கூடுவது ஒரு காரணத்தாலும் எழுத்து மூலம் கோரிக்கை கிடைக்கப்பெற்ற தேதி முதல் நாற்பது நாட்களுக்கு மிகக்கூடாததாகும்

16. தாமத மன்னிப்பு.- ஒரு சங்கத்தின் ஆவணங்களோ வருடாந்திர கணக்கு அறிக்கையையோ உறுப்பினர்களின் பட்டியலையோ சமர்ப்பதில் ஏற்படும் தாமதம், அவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது அனைத்துமே சமர்ப்பதிலுள்ள தாமதத்திற்கு ஒவ்வொரு வருடத்திற்கும் அரசு, அவ்வப்போது உத்தரவு மூலம் தீர்மானிக்கும் தொகையை அபராதமாக செலுத்துவதன் மூலம் மன்னிக்கப்படுவதும் அத்தகைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது முறைப்படுத்துவதுமாகும்.

17. மின்னணு முறை மூலம் ரிட்டேன்கள் போன்றவற்றை தாக்கல் செய்தல்.- அரசு, இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கங்களோடு இந்த சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்க வேண்டிய ரிட்டேன்கள், படிவங்கள் மற்றும் ஆவணங்கள் பரிந்துரைக்கப்படலாமெனும் படி அத்தகைய முறையில், மின்னணு முறை மூலம் சமர்ப்பிக்க கோரலாம்.

18. கணக்கு புத்தகங்கள் மற்றும் தணிக்கை.- (1) ஒவ்வொரு சங்கத்தின் நிர்வாக குழுவும் சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் நிர்வாக குழுவுக்கு உகந்ததென தோன்றும் பட்சம், சங்கம் பதிவாளரின் அதிகார வரம்பிற்குள் உள்ள பிற ஏதேனும் இடத்திலோ,-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(எ) சங்கத்தால் கிடைக்கப்பெற்ற மற்றும் செலவிடப்பட்ட அனைத்து தொகைகளும் எந்தெந்த விஷயங்களுக்காக தொகை கிடைக்கப்பெற்றன என்பதும் செலவிடப்பட்டது என்பதும்;

(பி) சங்கம் நடத்தியுள்ள அனைத்து விற்பனை மற்றும் வாங்குதல்;

(சி) சங்கத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள்

தொடர்பான சரியான கணக்கு புத்தங்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் விதிமுறைகளை பின்பற்றுவதில் தவறும் பட்சம் நிர்வாக குழுவில் ஒவ்வொரு உறுப்பினரும் தனது அறிவிற்கு உட்பட்ட செய்கையிலோ தவறினாலோ அத்தகைய தவறு நிகழ்ந்தது என்றால், நிர்ணயிக்கப்படும் படி, ஆயிரம் ரூபாய்க்கு மிகாத தொகையை அபராதமாக செலுத்த பொறுப்புடையவராவர்.

(3) ஒரு சங்கத்தின் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும், முறையே தகுதியுடைய ஒரு தணிக்கையாளர் தணிக்கை செய்ய வேண்டியதும் அவர் இருப்பு நிலையை தயார் செய்ய வேண்டியதும் வரவு செலவு கணக்குகள் குறித்து தயாரிக்கப்பட்ட சான்றளிப்பை சமர்ப்பிக்க வேண்டியதாகும்:

ஆனால், இரண்டு இலட்சம் ரூபாய்க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ள சங்கங்களின் விஷயத்தில், நிர்வாக குழுவின் உறுப்பினர்கள் அல்லாத உறுப்பினர்களிடமிருந்து ஒருவரை தணிக்கையாளராக நியமித்து கணக்குகளை தணிக்கை செய்வது போதுமானதாகும்.

(4) பதிவாளரின் முந்தைய அனுமதியுடன் டிசம்பர் 31-ஆம் தேதி தவிரயுள்ள பிற ஏதேனும் தேதி வரை கணக்குகள் தயார் செய்யும் ஒரு சங்கத்தின் விஷயத்தில், அத்தகைய சங்கத்தின் அனுமதி கிடைத்த பிறகுள்ள முதல் இருப்பு நிலை குறிப்பு மற்றும் வரவு செலவு கணக்குகள் துணைப்பிரிவு (3)-ன் தேவைக்காக முந்தைய அனுமதியின் பதிவாளர் ஏற்பாடு செய்கின்றபடியான அத்தகைய காலயளவில் இருக்கும்.

விளக்கம்.- இந்த பிரிவின் தேவைக்காக ''முறையாக தகுதி வாய்ந்த ஒரு தணிக்கையால்'' என்பது 1949-ன் பட்டயக் கணக்காளர் சட்டம் (1949-ன் மத்திய சட்டம் 38) படியான ஒரு பட்டயக் கணக்காளர் என பொருள்படும்.

19. பதிவாளர் முன்னில் இருப்பு நிலை குறிப்பு மற்றும் நிர்வாக குழுவின் வருடாந்திர பட்டியல் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்று.- ஒரு சங்கத்தின் வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெற்ற தேதி முதல் இருபத்து ஒன்று நாட்களுக்குள் பதிவாளர் முன்னிலையில், சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொழில்களின் பட்டியல் மற்றும் பிரிவு 18-ன் படி தணிக்கையாளர் சான்றளித்த வருடாந்திர இருப்பு நிலை குறிப்பு மற்றும் வரவு செலவு கணக்குகளின் நகலை சமர்ப்பிக்க வேண்டும்:

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆனால், போதுமான ஏதேனும் காரணத்தால் நிர்வாக குழு உறுப்பினர்களின் பட்டியலையும் வருடாந்திர இருப்பு நிலை குறிப்பையும் வரவு செலவு கணக்குகளின் நகலையும் சங்கத்தின் வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெற்ற இருபத்து ஒன்று நாட்களுக்குள் சமர்ப்பிக்க முடியவில்லை என்றால், காலதாமதத்தை மன்னிப்பதற்கான தேவைக்காகவும் பதிவுகளை தாக்கல் செய்வதற்குரிய அனுமதிக்காகவும் பதிவாளர் முன்னில் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும், அத்தகைய காலதாமதத்திற்கு போதுமான காரணம் இருப்பதாக பதிவாளர் திருப்தியுறும் பட்சம் காலதாமதத்தை மன்னித்தும் பதிவுகளை சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கியும் பரிந்துரைக்கப்படலாமெனும்படியான அபராதம் செலுத்துவதற்கு உட்பட்டு உத்தரவிடவும், போதுமான காரணங்கள் திருப்தியடையாத பட்சம், சங்கத்திடம் நேரடியாக கேட்பதற்கான ஒரு வாய்ப்பை அளித்த பிறகு விண்ணப்பத்தை நிராகரிக்கவும் சங்கத்திற்கு அத்தகைய பதிவுகளை திருப்பி அளிக்கலாம்:

மட்டுமல்லாமல், ஒரு சங்கம் அத்தகைய பதிவுகளை சமர்ப்பிக்க தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் தவறும் பட்சம், பதிவாளர் சங்கத்தை நேரடியாக கேட்பதற்கு ஒரு வாய்ப்பை அளித்து பிறகு ஒரு சங்கத்தின் பதிவை ரத்து செய்யவோ செயல்பாட்டை தொடரவோ ஒரு உத்தரவை வழங்க வேண்டியதும் பதிவு ரத்து செய்யப்படும் பட்சம் சங்கத்தின் சொத்துக்களை விநியோகம் செய்யவும் பொறுப்புகளிலிருந்து விடுபடவும் பிரிவு 30-ன் கீழ் சங்கம் கலைத்து விடப்பட்டதாக கருதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுமாகும்.

விளக்கம்.- இந்த காப்புவாசகத்தின் தேவைக்காக ஏதேனும் ஒரு வருடத்திற்கான பதிவுகளை சமர்ப்பிப்பதில் காலதாமதத்தை மன்னிப்பதற்காக விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு முதல் காப்பு வாசகத்தின் படி பதிவுகள் திருப்பி அளிக்கப்பட்டால் அந்த சங்கம் அந்த வருடத்திற்கான பதிவுகளை சமர்ப்பிப்பதில் தவறியதாக கருதப்படும்.

அத்தியாயம் 4
வழக்கு மற்றும் அவை தொடர்பான விஷயங்கள்

20. சங்கங்களால் மற்றும் சங்கத்திற்கு எதிராகவுள்ள வழக்குகள்.- இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கமும், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் படி தீர்மானிக்கப்படும் பிரசிடண்ட், தலைவர், செயலாளர் அல்லது சங்கத்தின் நிர்வாக குழு நியமிக்கும் நபர் அல்லது அலுவலக பொறுப்பாளரின் பெயரில் வழக்கு தொடர வேண்டியதும் தொடரப்பட வேண்டியதுமாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

21. வழக்குகளை தள்ளுபடி செய்யக் கூடாததாகும்.- ஏதேனும் சிவில் நீதி மன்றத்தின் முன்னிலையில் ஒரு சங்கத்தால் அல்லது சங்கத்திற்கு எதிராக உள்ள ஒரு வழக்கோ நடவடிக்கையோ, அந்த வழக்கோ நடவடிக்கையோ யார் அல்லது யாருக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ளது அந்த நபர் மரணமடையவோ வழக்கு தொடரப்பட்டுள்ள பதவியில் இருந்து நீக்கப்படவோ செய்யப்பட்டுள்ள காரணத்தால் தள்ளுபடி செய்யக்கூடாததும் அந்த வழக்கு அல்லது நடவடிக்கை அந்த நபரின் வாரிசின் பெயரில் தொடர வேண்டும்.

22. சங்கத்திற்கு எதிரான தீர்ப்பை அமல்படுத்துதல்.- (1) சங்கத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட நபர் அல்லது அதிகாரிக்கு எதிராக பிறப்பித்துள்ள ஒரு தீர்ப்பு, அத்தகைய நபருக்கோ அதிகாரிக்கோ அத்தகைய நபரினுடையவோ அதிகாரியினுடையவோ அசையும் அல்லது அசையா சொத்துக்களுக்கு எதிராகவோ, நடத்த கூடாததும் ஆனால் சங்கத்தின் சொத்துக்கு எதிராக நடத்தலாம்.

(2) தீர்ப்பை அமல்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தில் சங்கத்திற்காக யார் அல்லது யாருக்கு எதிராகவோ, அதது காரியம்போல் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதின் உண்மையை சமர்ப்பிக்க வேண்டியதும் சங்கத்தின் சொத்துகளுக்கு எதிராக தீர்ப்பை வழங்க வேண்டுமென கோர வேண்டியதாகும்.

23. துணை விதிகளின் கீழ் ஏற்படும் அபராதத்தை வசூலித்தல்.- சங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளின் படி முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் துணை விதிகளில், துணை விதி ஏற்படுத்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஏற்பாடு செய்யப்படாத பட்சம் அவைக்காக கூட்டப்பட்ட பொது கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கிற்கு குறையாத பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்ட துணை விதிகளிலோ, சங்கத்தின் ஏதேனும் விதி அல்லது துணைவிதியை மீறியதற்காக அபராதம் விதிக்கப்பட்டிருந்தால் அதனை பிரதிவாதி வசிக்கும் இடத்திலோ அல்லது சங்கம் அமைந்துள்ள இடத்திலோ சங்கத்தின் நிர்வாக குழுவிற்கு உகந்ததென கருதும் வகையில் அதிகாரமுள்ள நீதிமன்றம் மூலம் வசூலித்து கொள்ளலாம்.

24. உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு தொடரவேண்டுமென்று.- சங்கத்தின் விதிகளின் படி செலுத்த வேண்டிய உறுப்பினர் கட்டண நிலுவையை செலுத்தாமலோ, விதிகளுக்கு முரணாக சங்கத்தின் ஏதேனும் சொத்துக்களை ஏதேனும் வகையில் அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு தன் வசம் வைத்து வைக்கவோ தக்க வைக்கவோ, அல்லது சங்கத்தின் ஏதேனும் சொத்துக்களை சேதம் விளைவிக்கவோ, அழிக்கவோ செய்கின்ற சங்கத்தின் எந்தவொரு உறுப்பினருக்கும் எதிராக இந்த சட்டத்தில் குறிப்பிட்டுள்ள முறையில், நிலுவை தொகைக்காகவோ, அத்தகைய தக்க வைத்துகொள்ளுதலோ தன்வசம்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வைத்து கொள்வதோ சேதப்படுத்தவோ அழிப்பதோ மூலம் ஏற்படும் இழப்பீட்டிற்கு இழப்பீட்டை வசூலிப்பதற்கான வழக்கு தொடரலாம்.

25. குற்றவாளிகளான உறுப்பினர்கள் பிற நபர்களை போல் தண்டனைக்குரியவராவர் என்று.- சங்கத்தின் ஏதேனும் பணத்தை அல்லது சொத்தை அபகரிக்கவோ அல்லது, தெரிந்தே சங்கத்தின் சொத்துக்களை அழிக்கவோ, ஏதேனும் பத்திரம் அல்லது உடன்படிக்கை, பணத்திற்கான ஈடு, ரசீது அல்லது பிற ஏதேனும் ஆவணங்களை சங்கத்தின் நிதி இழப்பீட்டிற்காக போலியாக உருவாக்கவோ செய்கின்ற எந்தவொரு உறுப்பினரும், அதே குற்றத்திற்கு உறுப்பினராக அல்லாத ஒரு நபர் எவ்வாறு குற்றத்திற்கும் தண்டனைக்கும் உள்ளாகிறார்களோ அவ்வாறே குற்றத்திற்கு உள்ளாகியும் தண்டனைக்குரியவர்களாகவும் இருப்பர்.

அத்தியாயம் 5

சங்கங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் கலைப்பு

26. சங்கங்களை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கை முறைகள்.- (1) இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாக குழுவிற்கு இந்த சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு அவை பதிவு செய்யப்பட்ட நோக்கத்தில் மாற்றம் ஏற்படுத்தவோ அதை விரிவுபடுத்தவோ, சுருக்கவோ அல்லது பிற ஏதேனும் சங்கங்களுமாக ஒருங்கிணைக்கவோ தோன்றும்பட்சம் அத்தகைய நிர்வாக குழுவிற்கு மேற்குறிப்பிட்ட பரிந்துரையை எழுத்துபூர்வமான அல்லது அச்சிடப்பட்ட அறிக்கையின் வாயிலாக அதன் உறுப்பினர்களுக்கு வழங்குவதும் அதனை பரிசீலிப்பதற்காக சங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப ஒரு சிறப்பு பொதுக்குழு கூட்டத்தை கூட்டலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் குறிப்பிட்டுள்ள படியான எந்தவொரு பரிந்துரையும் அதை பரிசீலனை செய்வதற்காக நிர்வாக குழு அழைக்கும் குறிப்பிட்ட பொது கூட்டத்திற்கு இருபத்து ஒன்று நாட்களுக்கு முன்பாக சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும், பரிந்துரைக்கும் படியான, அறிக்கை வழங்கவோ அஞ்சல் மூலமாகவோ எலக்ட்ராணிக் வாயிலாகவோ அனுப்பப்படாத பட்சமும், வாக்களிப்பதற்கான தகுதியுள்ள மொத்த உறுப்பினர்களின் நான்கில் மூன்று ஆஜரும் நேரடியாக ஆஜராகியுள்ளவர்களின் பதிலாக வேறு நபரை பொறுப்பளித்துள்ள பட்சம் அவர்கள் உட்படவுள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையான வாக்களிப்பின் அடிப்படையில் நிறைவேற்றப்படாத பட்சம் அங்கீகரிக்கப்படமாட்டாது.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

27. கணக்குகள் கோரவும் புத்தகங்கள் மற்றும் பரிசோதிக்கவும் செய்வதற்கான அதிகாரம்.- (1) அரசுக்கு அல்லது பதிவாளருக்கு பதிவு செய்யப்பட்ட எந்தவொரு சங்கத்திடமும் அதன் வரவு செலவு கணக்குகளும் சொத்து பொறுப்புகளும் குறித்து, எந்தவொரு காலத்திற்குமான கணக்குகளை சமர்ப்பிக்குமாறு கோரலாம். அரசு பரிந்துரைக்கும் விஷயத்தில் பதிவாளர் அல்லது பதிவாளரின் பரிந்துரையின் படி சங்கத்தின் ஆய்வாளர் சங்கத்தின் கணக்குகள் புத்தகங்களை பரிசோதிக்க வேண்டியதும் அத்தகைய பரிசோதனையின் முடிவுகள், பரிந்துரைக்கப்படலாமெனும்படி, அறிக்கையாக அரசிடமோ அல்லது பதிவாளரிடமோ சமர்ப்பிக்க வேண்டும். பரிசோதனை செய்யும் அதிகாரிக்கு சங்கத்தின் எந்தவொரு வளாகங்களிலும் பணி நேரங்களில் நுழையவும் சங்கத்தின் நிர்வாக குழுவும் ஊழியரும் அத்தகைய அதிகாரி கோரும் அனைத்து விவரங்களையும் வழங்க வேண்டியதும், பரிசோதனை செய்யவும் அறிக்கை தயாராக்கவும் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டியதும் அவர்களின் பராமரிப்பிலுள்ள அனைத்து புத்தகங்களும் சங்கத்தின் அதிகாரம் தொடர்பான அனைத்து ஆவணங்களும் அவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரி முன்பாக சமர்ப்பிக்க வேண்டியதும் சங்கத்தின் காரியங்கள் தொடர்பான எந்த கேள்விக்கும் பதிலளிக்க வேண்டியதும் சங்கத்தின் நிர்வாக குழுவினுடையவும் ஊழியர்களினுடையவும் பொறுப்பாகும்.

(2) கணக்குகளும் பிற புத்தகங்களும் போதுமான காரணமின்றி வழங்கப்படவில்லை என்று பரிசோதனை செய்யும் அதிகாரி நம்புவதற்கு போதுமான காரணம் உள்ள பட்சம், காரணங்களும் அதற்கு அடிப்படையான காரணங்களையும் பதிவு செய்த பிறகு எந்தவொரு இடத்திலும் பரிசோதிக்கவோ அவ்வாறான கணக்கு புத்தகங்களையோ ஆவணங்களையோ கைப்பற்றவோ செய்யலாம்.

(3) அரசுக்கு, சங்கத்தின் மேம்பட்ட மற்றும் திறமையான நிர்வாகத்திற்கு, துணைப்பிரிவு (1)-ன் படி சமர்ப்பிக்கப்படும் அறிக்கையை மதிப்பீடு செய்யும் பிரிவு 32-ன் துணைப்பிரிவு (1)-ன் உட்பிரிவுகள் (எ) முதல் (சி) வரையுள்ள உட்பிரிவுகளில் குறிப்பிடப்படாததுமான உகந்ததென கருதும் உத்தரவுகளை பிறப்பிக்கலாம்.

28. சங்கத்தின் நிர்வாக குழுவில் ஏதேனும் உறுப்பினருக்கோ அல்லது ஊழியருக்கோ அபராதத்தை வசூலிக்கவும் ஒழுங்கின்மைக்காக நீக்கம் செய்வதற்குமான அதிகாரம்.- (1) அரசு, பிரிவு 27-ன் கீழ் பிறப்பித்த அதன் உத்தரவை வேண்டுமென்றே அல்லது அறிந்தே மீறி தவறிழைக்கும் சங்கத்தின் நிர்வாக குழுவில் உள்ள ஒரு உறுப்பினர் அல்லது ஊழியருக்கு அவ்வாறான அபராதத்திற்கு பரிந்துரைக்கப்படாதெனும்படி, ஆயிரம் ரூபாய்க்கு மிகாத தொகை அபராதத்தை செலுத்தவும், அவ்வாறு அபராதத்தை செலுத்துவதற்கான உத்தரவு கிடைத்த இரண்டு வாரங்களுக்கு பிறகும் அபராதம் செலுத்தாத உறுப்பினரையோ அல்லது ஊழியரையோ அரசுக்கு பணிநீக்கம் செய்யலாம்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

இந்த பிரிவின் கீழ் அரசு பிறப்பிக்கும் உத்தரவு அமலில் வருவதற்கு சங்கத்தின் நிர்வாக குழு கடமைப்பட்டுள்ளதும் அத்தகைய உத்தரவை அமலாக்கம் செய்வதில் அத்தகைய நிர்வாக குழுவிடம் தவறு ஏற்படும் பட்சம் அத்தகைய நிர்வாக குழு இந்த பிரிவின்படி அபராதம் செலுத்த பொறுப்புடையவராவர்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் பணிநீக்கம் செய்யப்பட்ட நபர் அவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்ட தேதி முதல் ஐந்து வருடத்திற்கு எந்தவொரு சங்கத்தின் நிர்வாக குழுவிலும் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படவோ பெயர் பரிந்துரை செய்யப்படவோ, அத்தகைய தகுதியின்மை அரசு நீக்காத பட்சம், தகுதியற்றவராவர்.

29. காலியிடங்கள் சங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப நிரப்ப வேண்டுமென்று.- (1) துணைப்பிரிவு 28-ன் படி நிர்வாக குழுவில் இருந்து ஒரு உறுப்பினர் நீக்கம் செய்யப்படுவது மூலம் ஏற்படும் காலியிடம் சங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப நிரப்பப்பட வேண்டும்.

(2) ஏதேனும் சூழலில் உறுப்பினர்களின் எண்ணிக்கை பிரிவு 4-ல் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையை விட குறையும் பட்சம் அது சங்கத்தின் குறிப்பாணை மற்றும் ஒழுங்குமுறைகளின் படி ஆறுமாதங்களுக்குள்ளாக நிரப்ப வேண்டியதும் அதை உடனடியாக பதிவாளரிடம் தெரிவிக்க வேண்டியதுமாகும்

30. சங்கங்களை கலைப்பதும் அவற்றின் காரியங்களை முறைப்படுத்துவதற்குமான ஏற்பாடு.- எந்தவொரு சங்கத்தினுடையவும் மொத்த உறுப்பினர்களின் நான்கில் மூன்று பங்கிற்கு குறையாத பெரும்பான்மை தீர்மானத்தின் பேரில் உறுப்பினர்களுக்கு அந்த சங்கத்தை கலைத்துவிட தீர்மானிக்கலாம் அதற்கு பிறகு உடனடியாகவோ குறிப்பிட்ட காலத்திற்குள் கலைக்கப்பட வேண்டியதும் ஆனால் சங்கத்தின் பொறுப்புகள் தவிரயுள்ள சொத்துக்கள் சட்டப்படி கைமாற்றம் செய்யவோ தீர்ப்பாக்கவோ செய்வதற்குரிய நடவடிக்கைகள் அதற்கு பொருத்தமான விதிகள், ஏதேனும் இருந்தால், மேற்குறிப்பிட்ட விதிகளின் படியோ அல்லது நிர்வாக குழுவிற்கு உகந்ததென கருதும் படியோ மேற்கொள்ள வேண்டியதும், அவை தொடர்பான விவரங்கள் மற்றும் அதற்கான ஆவணங்கள் உட்பட முப்பது நாட்களுக்குள் பதிவாளர் முன்னில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

ஆனால், மேற்குறிப்பிட்ட நிர்வாக குழுவிற்கோ அல்லது உறுப்பினர்களுக்கோ இடையில் ஏதேனும் காரியங்களை முறைப்படுத்தும் சந்தர்ப்பங்களில் ஏதேனும் தகராறு எழும் பட்சம் சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள இடம் உட்பட்ட மாவட்டத்தில் முதல் வழக்கை விசாரணை செய்வதற்கு அதிகாரமுள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட வேண்டியதும், நீதிமன்ற உத்தரவின் படி அவை தீர்த்து வைக்கப்பட வேண்டும்:

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அதுமட்டுமல்லாமல், சங்கம் கலைக்கப்படுவதற்காகவே ஆன ஒரு சிறப்பு பொது கூட்டத்தில் நேரில் வாக்களிக்கும் உறுப்பினர்களின் அல்லது பதிலாக மற்றொருவர் நியமிக்கப்பட்டிருந்தால் அத்தகைய உறுப்பினர்களின் நான்கில் மூன்று பங்கு குறையாத பெரும்பான்மையினர் இல்லாதபட்சம் எந்தவொரு சங்கத்தையும் கலைக்கக்கூடாது:

ஆனாலும், இந்த சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சங்கத்தில் அரசு உறுப்பினராகவோ, வரிக்காரராகவோ அல்லது பிற ஏதேனும் வகையில் உரிமை உள்ளதாகவோ இருக்கும் பட்சத்தில் அத்தகைய சங்கம் அரசின் அனுமதி இல்லாமல் கலைக்கப்படலாகாது.

31. கலைத்துவிடப்பட்ட பிறகு எந்தவொரு உறுப்பினரும் லாபத்தை பெறுதல் கூடாதென்று.- (1) கலைத்துவிடப்பட்ட சங்கத்தின் உறுப்பினர்களுக்கு சங்கம் கலைத்துவிடும் போதுள்ள கடன்களும் பொறுப்புகளும் தீர்க்கப்பட்ட பிறகு ஏதேனும் சொத்துக்கள் எஞ்சியிருப்பின் பரஸ்பர சம்மதத்தின்படி ஏற்படுகின்ற ஒப்பந்தங்களின் அல்லது நிபந்தனைகளின் அடிப்படையில் அல்லது பிரிவு 3-ல் குறிப்பிடப்படும் தேவைக்காக பயன்படுத்தப்படவோ அரசுக்கு வழங்குவதற்கு கலைக்கப்படும் வேளையில் ஆஜர் ஆன உறுப்பினர்களின் அல்லது பதிலாக மற்றொருவர் நியமிக்கப்படும் பட்சம் உறுப்பினர்களினுடைய வாக்களிப்பின் பெரும்பான்மைக்கு ஏற்ப தீர்மானிக்கலாம்.

(2) இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சங்கம் அதன் கடன்களையும் பொறுப்புகளையும் தீர்த்த பிறகு எஞ்சியிருக்கும் சொத்தை அதன் உறுப்பினர்களுக்கு வழங்கவோ அவர்களுக்கு இடையில் அல்லது அவர்களில் எவருக்கோ விநியோகிக்கவோ கூடாது. அவை சங்கம் கலைக்கப்படும் வேளையில் நேரில் ஆஜராகவோ பதிலாக மற்றொரு நபரை நியமிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தால் அவ்வாறு பதிலாக ஆஜராய நபர்களும் சேர்ந்து நான்கில் மூன்று பங்கு பெரும்பான்மையின் அடிப்படையிலோ, அதற்கு முடியாமல் போனால் முதல் அதிகாரமுள்ள உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி சங்கத்தின் நோக்கங்களுக்கு மிகவும் ஒப்புமையுடைய இந்த சட்டத்தின் படி பதிவு செய்த மற்றொரு சங்கத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

32. புதிய நிர்வாக குழுவை நியமிக்கவோ திறன் வாய்ந்த செயல்பாட்டிற்கான திட்டத்தை தயாராக்கவோ சங்கத்தை கலைத்து விடுவதற்காகவோ நீதிமன்றத்தின் முன்பாக வழங்கப்படும் விண்ணப்பம்.- (1) அரசோ, சங்கத்தின் உறுப்பினர்களில் பத்து சதவீதமோ அவை பதிவு செய்யப்பட்டுள்ள சங்கத்தின் அதிகார வரம்புடைய மாவட்ட நீதிமன்றத்தின் முன்பாக சங்கத்தின் புதிய நிர்வாக குழுவை நியமிக்கவோ சங்கத்தின் திறன் வாய்ந்த செயல்பாட்டிற்கான திட்டத்தை தயாராக்கவோ சங்கத்தை கலைத்து விடவோ

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

விண்ணப்பம் சமர்ப்பித்தால், நீதிமன்றத்திற்கு அவை நியாயமானதும், நீதிபூர்வமானதும் என திருப்தியுறும் பட்சம்,-

(எ) தற்போதுள்ள நிர்வாக குழுவை நீக்கவும் புதிய நிர்வாக குழுவை நியமிக்கவும்; அல்லது

(பி) சங்கத்தின் மேம்பட்டதும் மற்றும் திறன் வாய்ந்த செயல்பாட்டிற்கான ஒரு திட்டத்தை தயார் செய்யவும்; அல்லது

(சி) சங்கத்தை கலைப்பதற்கும்

உத்தரவுகளை பிறப்பிக்கலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் உள்ள விண்ணப்பத்தை உறுப்பினர்கள் சமர்ப்பிக்கும் பட்சம், விண்ணப்பதாரர், விண்ணப்பத்துடன் பரிந்துரைக்கப்படலாமெனும்படியான தொகையை நீதிமன்றத்தின் முன்பாக பாதுகாப்பு தொகையாகவும் செலவு தொகையாகவும் செலுத்திட வேண்டும்.

33. ஆவணங்களை ஆய்வு செய்தல்.- இந்த சட்டத்தின் கீழ் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி எந்தவொரு நபருக்கும் ஆய்வு செய்யவும் பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி நகலை எடுக்கவும் அவ்வாறு பதிவாளர் சான்றளித்த நகல்கள் எத்தகைய சட்ட நடவடிக்கைகளின் தேவைக்கான முதற்கட்ட தெளிவாக இருக்கும்.

அத்தியாயம் 6

பதிவாளரின் விசாரணை மற்றும் நடவடிக்கை முறைகள்

34. பதிவாளர் சங்கங்களின் ஒரு பதிவேட்டை பாதுகாக்க வேண்டுமென்று.- (1) பதிவாளர், சங்கங்களின் ஒரு பதிவேட்டை பாதுகாக்க வேண்டியதும், அத்தகைய பதிவேட்டில் ஒவ்வொரு சங்கத்தின் பெயர், பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி, பதிவு செய்யப்பட்ட தேதி மற்றும் இந்த சட்டத்தின் விதிமுறைகளின் படி தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் விவரம் ஆகியவை சேர்க்கப்பட வேண்டும்.

(2) ஒவ்வொரு சங்கமும் தொடர்பான சங்க அமைப்பு குறிப்பும் மற்றும் அனைத்து ஆவணங்களும் பரிந்துரைக்கப்பட்ட முறையில் தனித்தனியாக பாதுகாக்க வேண்டும்.

(3) ஒரு சங்கம் செயல்படவில்லையென பதிவாளர் நம்புவதற்கு நியாயமான காரணம் உள்ள பட்சம் அச்சங்கம் செயல்படுகிறதா என்பதை விசாரித்து சங்கத்தின் பதிவேடு செய்யப்பட்ட முகவரியில் இரண்டிற்கு குறையாத சங்கத்தின் பொறுப்பாளர்களுக்கு பதிவு தபால் மூலம் கடிதம் அனுப்ப வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(4) துணைப்பிரிவு (3)-ன் படியான கடிதத்தை அனுப்பிய ஒரு மாதத்திற்குள் சங்கம் செயல்படவில்லை என்ற பதிலோ அல்லது பதில் கிடைக்கப்படாமல் இருந்தால் அதை அரசிதழில் வெளியிடப்பட வேண்டியதும் மேற்குறிப்பிட்ட அரசிதழின் தேதி முதல் மூன்று மாதங்கள் முடிவடைந்ததும் சங்கத்தின் பெயர் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்ற ஒரு அறிக்கை பதிவு அஞ்சல் மூலமாக அனுப்ப வேண்டியதும் மாறாக காரணங்கள் எதுவும் காட்டப்படாத பட்சம் பதிவேட்டில் சங்கம் செயல்படவில்லை என சேர்க்கப்பட்டு பெயர் நீக்கம் செய்யப்பட வேண்டும்.

35. பதிவாளரால் நடத்தப்படும் விசாரணை.- (1) பதிவாளர், சுயமாகவோ சங்கத்தின் நிர்வாக குழுவின் உறுப்பினர்களின் பெரும்பான்மையரின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களின் விண்ணப்பத்தால், நேரடியாகவோ அல்லது துணை பதிவாளர் பதவிக்கு குறையாத ஒரு அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டு எழுத்துபூர்வமான உத்தரவு மூலம் சங்கத்தின் செயல்பாடுகளை குறித்து விசாரணை நடத்தலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் படி விசாரணை நடத்தும் பதிவாளர் அல்லது பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட அலுவலர்,-

(i) நியாயமான எந்த வேளையிலும் சங்கத்தின் கைவசமுள்ளதோ இருக்க வேண்டியதோ ஆன புத்தகங்கள், கணக்குகள், ஆவணங்கள், முதலீடுகள் , வைப்பு தொகை, பணம் மற்றும் பிற சொத்துக்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்கும் அத்தகைய புத்தகங்கள், கணக்குகள், ஆவணங்கள், முதலீடுகள், பணம் மற்றும் பிற சொத்துக்கள் போன்றவற்றின் கைவசமோ, பராமரிப்போ உள்ள எந்த ஒரு நபரையும் அழைத்து அவற்றை சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது கிளையில் சமர்ப்பிக்க கோரவும்;

(ii) சங்கத்தின் ஏதேனும் விவரங்களை குறித்து தகவல் தெரிந்திருப்பதாக நம்புவதற்கு போதுமான காரணமுள்ள எந்தவொரு உறுப்பினரையும் தமது அலுவலகத்திலோ அல்லது சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்திலோ அல்லது அதன் ஏதேனும் கிளையில் வைத்து தமது முன்பாக ஆஜராகவும் அத்தகைய நபரின் சத்திய வாக்குமூலத்தை பெற்று விசாரணை நடத்தவும்;

(iii) சங்கத்தின் பொதுக்கூட்டத்திற்கு முன்பான அறிவிப்பை சமர்ப்பிக்க வேண்டிய காலவரையை குறித்து இந்த சட்டத்திலோ சங்கத்தின் விதிகளிலோ ஒழுங்குமுறைகளிலோ என்னதான் அடங்கியிருந்தாலும், ஒரு சங்கத்தின் நிர்வாக குழுவிடம் சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் வைத்தோ அதன் ஏதேனும் கிளைகளில் வைத்தோ ஒரு பொது கூட்டத்தை கூட்டுவதற்கு கோரவும்
அதிகாரம் இருப்பதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(3) சங்கத்தின் நிர்வாக குழு ஒரு பொதுக்கூட்டத்தை கூட்டுகின்ற பரிந்துரையை நிராகரிக்கவோ அவ்வாறு செய்வதில் தவறவோ செய்யும் பட்சம், பதிவாளருக்கோ, துணைப்பிரிவு (2)-ல் குறிப்பிடப்பட்டுள்ள நபருக்கோ கூட்டத்தை தாமாகவே கூட்டுவதற்கான அதிகாரம் உள்ளதும், அவ்வாறு கூட்டப்படும் கூட்டத்திற்கு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் படியான ஒரு பொதுக்கூட்டத்தின் அனைத்து அதிகாரங்கள் உள்ளதும் அதன் நடவடிக்கை முறைகள் அத்தகைய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(4) பதிவாளர் இந்த பிரிவின் கீழ் ஒரு விசாரணையை நடத்திய பிறகு அதன் அறிக்கையை சம்மந்தப்பட்ட சங்கத்திற்கு வழங்க வேண்டியதும் அத்தகைய அறிக்கையில் பதிவாளர் நடவடிக்கைகள் ஏதேனும் பரிந்துரைத்திருப்பின் அதன் படியான தொடர் நடவடிக்கைகளை சங்கம் மேற்கொள்ள வேண்டும்.

36. சங்க ஆய்வாளரின் அதிகாரங்கள்.- சங்க ஆய்வாளருக்கு,-

(i) சங்கத்தின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கும்;

(ii) விசாரணை நடத்துவதற்கும்;

(iii) சங்கத்தின் ஏதேனும் விவரங்கள் குறித்து தகவல் தெரிந்திருப்பதாக நம்புவதற்கு போதுமான காரணம் உள்ள எவரையும் சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்திலோ அதன் ஏதேனும் கிளையிலோ சங்க பதிவாளரின் அலுவலகத்திலோ வைத்து தமது முன்பாக ஆஜராகவும் அந்த நபரின் சத்திய வாக்குமூலத்தை பெற்று விசாரணை நடத்துவதற்குமாக அழைப்பதற்கும்;

(iv) சங்கத்தின் கணக்குகளும் இருப்பு நிலை குறிப்பை ஆய்வு செய்வதற்கும் அவை குறித்த அறிக்கையை சமர்பிப்பதற்கும்

அதிகாரம் இருப்பதாகும்.

37. சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை மீட்டெடுத்தல்.- (1) பிரிவு 35-ன் கீழுள்ள ஒரு விசாரணையில் சங்கத்தின் செயல்பாட்டிலோ அதன் நிர்வாகத்தில் பங்கேற்றுள்ள நபரோ அல்லது சங்கத்தின் தற்போதுள்ளதோ முன்பு இருந்ததோ ஆன ஏதேனும் பிரசிடண்ட், தலைவர், செயலாளர் பிற பங்குதாரர்கள், நிர்வாக குழு உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியர் சங்கத்தின் சொத்து அல்லது பணத்தை தவறாக பயன்படுத்தவோ, கைவசம் வைக்கவோ, கடனை ஏற்படுத்தவோ அல்லது சங்கத்தின் தொடர்பாக சட்ட விரோத செயல்பாட்டில் குற்றவாளியாகவோ, நம்பிக்கை மீறலை செய்தால் செயலாளர் சங்கத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கையின் பேரிலோ நிர்வாக குழுவிடமிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பத்தின் பேரிலோ அல்லது தாமாகவோ, அத்தகைய நபரை அவருடைய விளக்கத்தை சமர்ப்பிப்பதற்கு போதுமான ஒரு வாய்ப்பை அளித்த பிறகு அவருடைய செயல் தொடர்பான விசாரணையை நடத்திய பிறகு, அவரிடம் பணம்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அல்லது சொத்தை அதது காரியம் போல், திருப்பி செலுத்தவும் மீட்டெடுக்கவும் தவறாக பயன்படுத்தியதோ, கைவசம் வைத்ததோ சட்ட விரோத செயலை செய்ததோ நம்பிக்கை மீறலை செய்ததோ ஆன வகையில் இழப்பீட்டிற்கு ஈடாக பதிவாளர் பொருத்தமென கருதும் இழப்பீட்டை ஈடாக்குவதற்கான உத்தரவை பிறப்பிக்கலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் உள்ள பதிவாளரின் உத்தரவு அது கிடைத்த அறுபது நாட்களுக்குள் பதிவுத்துறை தலைவர் முன்பாக மேல்முறையீட்டை தாக்கல் செய்து தள்ளுபடி செய்யாத பட்சம் இறுதியாக இருக்கும்:

ஆனால், அவ்வாறு மேல்முறையீடு சமர்ப்பிக்கப்படாத விஷயத்தில் நியாயமான காரணத்தை திருப்திபடுத்தும் பட்சம், காலதாமதத்தை மன்னித்து விடுவதற்கு மேல்முறையீட்டு காலவரையை முப்பது நாட்களுக்கு மிகாமல் நீடித்து வழங்க அதிகாரிக்கு அதிகாரம் இருப்பதாகும்.

(3) துணைப்பிரிவு (2)-ன் படி பதிவு துறைத் தலைவர் மேல்முறையீட்டை நிராகரிக்கும் பட்சம் அவ்வாறு நிராகரிப்பு அறிவிப்பு கிடைத்த தேதி முதல் முப்பது நாட்களுக்குள் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் அரசு முன்பாக ஒரு மறு பரிசீலனையை தாக்கல் செய்யலாம்.

(4) அரசு தாமாகவே துணைப்பிரிவு (2)-ன் படி மேல்முறையீடு சமர்ப்பிக்கப்படாத விஷயத்தில் அல்லது துணைப்பிரிவு (3)-ன் படியான மறுபரிசீலனையில் பொருத்தமான உத்தரவை பிறப்பிக்கலாம்.

(5) இந்த பிரிவின் கீழ் சங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டுமென்றோ வசூலிக்கப்படவேண்டுமென்றோ ஆணையிடப்பட்ட எந்தவொரு தொகையையும், பதிவாளர் இது குறித்து ஒரு கோரிக்கையை விடுவிக்கும் பட்சம் 1968-ன் கேரள வருவாய் மீட்பு சட்டத்தில் (1968-ன் 15)-ன் கீழ் நில வருவாய் நிலுவைத் தொகையை போலவே வசூலாக்கப்பட வேண்டும்.

38. சில சங்கங்களின் பதிவை ரத்து செய்தல் மற்றும் கலைத்தல்.- (1) இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்ததாக கருதப்படுவதோ ஆன ஏதேனும் சங்கம் சட்டத்திற்கு புறம்பான செயலை செய்வதாகவோ அல்லது சட்டத்திற்கு புறம்பாக செயல்பட அனுமதிப்பதாகவோ பதிவாளர் திருப்தியுறும் பட்சம், பதிவாளர் அத்தகைய சங்கத்தின் செயல்பாடுகள் தொடர்பான ஒரு விசாரணையை நடத்தவோ, அதற்கு துணை பதிவாளரின் பதவிக்கு குறையாத மற்றொரு அதிகாரியிடம் பொறுப்பை ஒப்படைத்து அறிக்கை பெறவோ அத்தகைய அறிக்கையை விசாரணை வேளையில் பதிவாளர், அல்லது அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரி பிரிவு 36-ல் குறிப்பிட்டுள்ள அதே அதிகாரங்களை பெற்றிருக்க வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழுள்ள விசாரணையில், அத்தகைய ஏதேனும் சங்கம் அதன் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் ஏதேனும் சட்டத்திற்கு புறம்பான செயலை செயல்படுத்துவதாகவோ அல்லது சட்டத்திற்கு புறம்பான செயலை அனுமதித்துள்ளதாகவோ பதிவாளர் திருப்தியுறும் பட்சம் அவர், சங்கத்தின் பதிவை ரத்து செய்யாமலிருக்க காரணம் ஏதேனும் இருந்தால் அதை உணர்த்த ஒரு அறிவிப்பை சங்கத்திற்கு அளித்த பிறகு விளக்கத்தை அளிக்க முப்பது நாட்கள் கால அவகாசத்தை அனுமதிக்கவும், பிறகு எழுத்துபூர்வமான ஆணையின் படி சங்கத்தின் பதிவை ரத்து செய்ய வேண்டியதும் சங்கத்தை கலைக்குமாறு பரிந்துரை வழங்கவும் பிரிவு 30-ன் படி சங்கம் கலைக்கப்பட்டிருந்தால் போல சங்கத்தின் சொத்துக்கள் விநியோகிக்கப்பட வேண்டியதும் பொறுப்புகள் தீர்க்கப்பட வேண்டியதுமாகும்.

(3) பதிவாளர் துணைப்பிரிவு (2)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் உத்தரவின் மீதான மேல்முறையீடு, உத்தரவு கிடைத்த அறுபது நாட்களுக்குள் அரசு முன்பாக தாக்கல் செய்யப்பட வேண்டியதும் அத்தகைய மேல்முறையீட்டின் மீதான தீர்ப்பு இறுதியானதாக இருக்கும்.

விளக்கம்:- இந்த பிரிவின் தேவைகளுக்காக தற்போது அமலிலுள்ள ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் நிபந்தனைகளின் தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றமாக அமையும் எந்தவொரு செயலும் சட்டத்திற்கு புறம்பானதாக கருதப்படும்.

39. நிர்வாகியை நியமித்தல்.- (1) இந்த சட்டத்தில் என்னதான் அடங்கியிருந்தாலும்,-

(எ) ஏதேனும் ஒரு சங்கத்திற்கு ஏதேனும் வழக்கின் காரணமாகவோ பிற வகையிலோ வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தை நடத்தாமல் இருக்கவோ அல்லது நடத்த முடியாமலோ; அல்லது

(பி) ஒரு சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர்களின் காலவரை முடிவடைந்து ஏதேனும் காரணத்தால் ஒரு புதிய நிர்வாக குழுவை உருவாக்க முடியாமலோ; அல்லது

(சி) பதிவாளர் அளிக்கும் ஒரு அறிக்கையின் மீதோ பிற வகையிலோ விசாரணையின் மீது அரசு பொது நலன் கருதி அவ்வாறு செய்வது உகந்ததென கருதவோ செய்யும் பட்சமோ

ஆறு மாதத்திற்கு மிகாத, உத்தரவில் குறிப்பிட்டுள்ள, காலவரையில் சங்கத்தின் காரியங்களை நடத்துவதற்காக அரசுக்கு அந்த துறையில் திறமையான ஒரு நபரை உத்தரவு மூலம் நிர்வாகியாக நியமிக்கலாம்:

ஆனால், அத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னால் சங்கத்தின் தலைமை அலுவலகத்தின் அறிக்கை பலகையில் அல்லது இணைய தளத்தில் அத்தகைய உத்தரவை பிறப்பிப்பதில் ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாக காலவரையறைக்கு எழுத்து பூர்வமாக அரசிடம்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கோரிக்கையும் வெளியிடப்பட வேண்டியதும் அத்தகைய ஆட்சேபனைகள் பரிசீலிக்கப்பட வேண்டியதுமாகும்:

அதுமட்டுமல்லாமல், பொதுநலன் கருதி நிர்வாகியை நியமிப்பது அவசரமானது என அரசு திருப்தியுறும்பட்சம், மேலே குறிப்பிட்டுள்ள காப்பு வாசகத்தில் தளர்வை ஏற்படுத்தி அவ்வாறு நிர்வாகியை நியமிக்கலாம்:

ஆனாலும், அரசுக்கு காரணங்களை தெளிவுபடுத்தி எழுத்து பூர்வமான உத்தரவு மூலம், அத்தகைய காலயளவை முற்கால அமலாக்கத்துடனோ அல்லது பிற்கால அமலாக்கத்துடனோ ஒவ்வொரு முறையும் ஆறு மாதத்திற்கு மிகாத காலவரையில் துணைப்பிரிவு (5)-ன் விதிமுறைகளுக்கு உட்பட்டு நீடிக்கவும், ஆனால் அவை நான்கு ஆண்டுகளுக்கு மேல் மிகக்கூடாததாகும்.

(2) நிர்வாகியின் ஊதியம் மற்றும் சலுகைகளுக்காக மாநில அரசு செலவிடும் தொகை சங்கத்தின் நிதியிலிருந்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டும் விதிமுறையில் இருந்து சலுகை அளிக்கலாம்:

ஆனால் பொதுநலனை கருத்தில் கொண்டு எழுதப்பட்ட காரணத்தால் அரசு மேற்கொண்ட விதிமுறையிலிருந்து சலுகை அளிக்கலாம்.

(3) துணைப்பிரிவு (1)-ன் படி நிர்வாகியை நியமிக்கும்போதும் அத்தகைய நியமனத்தின் கால அளவிலும் சங்கத்தின் நிர்வாக குழு சட்டத்தின் மூலம் அளிக்கப்படும் அதிகாரத்தை பயன்படுத்துவதில் இருந்தும் அதன்படியான செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளை செயல்படுத்துவதில் இருந்தும் நிறுத்தப்படுவதும் அல்லது அதன் சங்க அமைப்பு குறிப்புகள் அல்லது விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் அல்லது பிற ஏதேனும் சட்டப்படியான அதிகாரத்தை பயன்படுத்துவதில் இருந்தும் அதன்படியான செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளை செயல்படுத்துவதில் இருந்து நிறுத்தப்படுவதும், அத்தகைய செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளை அரசு, காலாகாலங்களில் பிறப்பிக்கும் அறிவுரைகளுக்கு ஏற்ப நிர்வாகி செயல்படுத்த வேண்டும்.

(4) நிர்வாகியின் நியமனம் காலவரை முடிவடைவதற்கு முன்பு நிர்வாக குழுவின் காலவரம்பு முடிவடைந்தால், நிர்வாகி, அவருடைய நியமன காலவரம்பு முடிவடைவதற்கு முன்னரே, தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாக குழு அதிகாரத்தில் வருவதற்கான வகையில் தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(5) நிர்வாகிக்கு அவருடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால், பொதுக்குழு கூட்டத்தை கூட்டி நிர்வாக குழுவை தேர்ந்தெடுக்க முடியாத சந்தர்ப்பங்களில் அந்த விஷயத்தை உடனடியாக அரசுக்கு அறிக்கை செய்ய வேண்டியதும், அரசு, நிர்வாகியின் காலவரையை மேலும் கூடுதல் காலவரைக்கு நீடிப்பதற்கோ பொதுநலன்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கருதி அவ்வாறு தேவையென திருப்தியுறும் பட்சம் சங்கத்தை கலைப்பதற்கோ, உள்ள உத்தரவை பிறப்பிக்க வேண்டியதுமாகும்:

ஆனால், அத்தகைய உத்தரவை பிறப்பிப்பதற்கு முன்பாக அரசு அந்த வகையில் ஆணையை பிறப்பிப்பதற்கு எதிராக ஏதேனும் ஆட்சேபனை உண்டுயெனில் அதை குறிப்பிட்ட காலவரைக்குள் சமர்ப்பிக்க வேண்டுமென கோரிக்கொண்டு ஒரு காரணம் காட்டு அறிக்கை சங்கத்தின் தலைமை அலுவலகத்தின் அறிக்கை பலகையில் அல்லது இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டியதும் அத்தகைய ஆட்சேபனைகள் பரிசீலிக்கப்பட வேண்டியதுமாகும்:

(6) அரசுக்கு, உகந்ததென தோன்றும் பட்சம், துணைப்பிரிவு (1)-ன் படி நியமிக்கப்படும் நிர்வாகியை இந்த சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அதிகாரத்தை பயன்படுத்தி தனது செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளை செயல்படுத்த ஆலோசனை வழங்குவதற்கும் உதவுவதற்குமாக நிர்வாகியுடன் கலந்தாலோசித்து தொடர்புடைய துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை உட்படுத்தி ஒரு ஆலோசனை குழுவை நியமிக்கலாம். ஆலோசனை குழு அரசு தீர்மானிக்கின்ற காலவரையறை மட்டும் அவ்வகையில் தொடரலாம்.

(7) துணைப்பிரிவு (5) -ன் கீழ் ஒரு கலைப்பு உத்தரவு பிறப்பிக்கப்படும் போது சங்கத்தின் பொறுப்புகளை தீர்த்த பிறகு ஏதேனும் சொத்துக்கள் எஞ்சியிருந்தால் அவை அரசிடம் ஒப்படைக்கப்படுவதாகும்.

அத்தியாயம் 7

பலவகை

40. குற்றங்கள் மற்றும் தண்டனைகள்.- பிரசிடண்ட், தலைவர், செயலாளர் அல்லது நிர்வாக குழுவில் உட்படுத்தப்பட்டதோ அல்லாததோ ஆன ஏதேனும் உறுப்பினர் அல்லது சங்கத்தின் ஏதேனும் அலுவலர் அல்லது ஊழியர்,-

(i) பிரிவு 15-ன் விதிமுறைகளை மீறவோ; அல்லது

(ii) வேண்டுமென்றே ஒரு தவறான அறிக்கையை தயாரிக்கவோ, சமர்ப்பிக்கவோ உண்மை இல்லை என்று தான் நம்பாத ஒரு அறிக்கை அல்லது வாக்குமூலத்தை செய்யவோ, சமர்ப்பிக்கவோ; அல்லது

(iii) வேண்டுமென்றே அல்லது நியாயமான காரணம் ஏதுமின்றி ஏதேனும் அழைப்பாணையோ, இந்த சட்டத்தின் விதிமுறைகளின்படி பிறப்பிக்கப்பட்ட சட்டப்பூர்வமாக, எழுத்து மூலமான ஏதேனும் உத்தரவை மீறவோ இந்த சட்டத்தின் விதிமுறைகளின் படி பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட ஏதேனும் நபர் சட்டப்பூர்வமாக

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

தேவைப்படும் ஏதேனும் தகவலை அளிக்காமல் இருக்கும் பட்சம் குற்றம் நிரூபிக்கப்படும் பட்சம் ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதத்திற்கு உட்படுவர்:

ஆனால், பிற ஏதேனும் சட்டப்படிமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இது ஒரு தடையாக இருக்காது.

41. இந்த சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்களின் விசாரணை.- (1) இந்த சட்டத்தின் கீழ் உள்ள எந்தவொரு குற்றமும், பதிவாளரின் அறிக்கை கிடைக்கப் பெறவோ, பதிவாளரின் எழுத்துபூர்வமான அனுமதியுடன் ஏதேனும் நபரோ, அத்தகைய குற்றங்கள் தொடர்பான பதிவாளருக்கு கீழ் உள்ள ஏதேனும் அதிகாரி அளிக்கும் புகாரின் பேரிலோ அல்லாமல் எந்தவொரு நீதிமன்றமும் விசாரணை செய்யக்கூடாது.

(2) குற்றம் சாட்டப்பட்டவரின் விண்ணப்பத்தின் பேரில், பரிந்துரைக்கப்பட்ட சமரச கட்டணத்தை செலுத்தும் பட்சம், இந்த சட்டத்தின் விதிமுறைகளின் படி தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களை சமரசம் செய்ய பதிவாளருக்கு அதிகாரம் இருப்பதும் அத்தகைய சமரசம் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றத்திலிருந்து விடுவிக்கவும் காரணமாக இருக்கும்.

42. குற்றங்களுக்கு நடவடிக்கை எடுத்தல்.- இந்த சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்களை முதல் வகுப்பு நீதிமன்றத்தின் நீதிபதி நீதிமன்றத்தில் விசாரணை செய்ய வேண்டும்.

43. விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரம்.- (1) அரசுக்கு, அரசிதழ் அறிக்கை வாயிலாக, இந்த சட்டத்தின் விதிமுறைகளை செயல்படுத்துவதற்காக முற்கால அமலாக்கத்துடனோ, பிற்கால அமலாக்கத்துடனோ விதிகளை உருவாக்கலாம்.

(2) இந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் எந்தவொரு விதியும் அவை இயற்றப்பட்டவுடன் இயன்றளவு விரைவாக சட்டமன்ற கூட்டத்தொடரில் இருக்கும்போது கூட்டத்தொடர் முன்பாக ஒரு கூட்டத்தொடரிலோ அல்லது அடுத்தடுத்த இரண்டு கூட்டத் தொடர்களிலோ உள்ளடங்கிய மொத்தம் பதினான்கு நாட்களுக்கு வைக்கப்பட வேண்டியதும் அவ்வாறு அது எந்த கூட்டத்தொடரில் வைக்கப்படுகிறதோ அந்தக் கூட்டத்தொடரோ அல்லது தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு சட்டமன்றம் மேற்குறிப்பிட்ட விதியில் ஏதேனும் திருத்தம் ஏற்படுத்தவோ அல்லது அந்த விதி இயற்றப்பட வேண்டாம் என முடிவு செய்கின்ற பட்சம் அந்த விதிக்கு அதற்கு பிறகு அதது காரியம்போல், அவ்வாறு திருத்தம் ஏற்படுத்தப்பட்ட வடிவத்தில் மட்டுமே அமலாக்கத்தில் இருக்கவோ அல்லது எந்தவொரு அமலாக்கமும் இல்லாமல்போகும் எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் திருத்தம் அல்லது இரத்து செய்தல் அந்த விதியின் கீழ் முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் விஷயத்தின் செல்லுபடிதன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இருக்க வேண்டியதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

44. இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.- (1) இந்த சட்டத்தின் விதிமுறைகளை செயல்படுத்துவதில் ஏதேனும் இடர்பாடுகள் ஏற்படும் பட்சம், அரசு அரசிதழில் வெளியிட்ட உத்தரவு மூலம், அத்தகைய இடர்பாடுகளை நீக்குவதற்கு தேவையென தோன்றுவதும் இந்த சட்டத்திற்கு முரணாக இல்லாததுமான, எந்த விஷயமும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு செய்யலாம்:

ஆனால், இந்த சட்டத்தின் ஆரம்ப தேதி முதல் இரண்டு வருடத்திற்கு பிறகு அத்தகைய எந்தவொரு உத்தரவும் இந்த சட்டத்தின் கீழ் பிறப்பிக்க கூடாது.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவும், அவை பிறப்பிக்கப்பட்ட பிறகு இயன்றளவு விரைவில், சட்டமன்றம் முன்பாக வைக்கப்பட வேண்டும்.

45. இரத்து செய்தலும் காப்பும்.- (1) 1956-ன் மாநில மறு சீரமைப்பு சட்டம் (1956-ன் 37-வது மத்திய சட்டம்) பிரிவு 5-ன் துணைப்பிரிவு (2)-ல் குறிப்பிட்டுள்ள மலபார் மாவட்டத்தில் அமலில் இருக்கின்ற 1860-ல் சங்கங்கள் பதிவு சட்டம் (1860-ன் 21-வது மத்திய சட்டம்) அந்த பகுதிக்கு பொருந்துவது இல்லாமல் ஆவதும் 1955-ன் திருவிதாங்கூர்-கொச்சி இலக்கிய, அறிவியல் மற்றும் அறச்சங்கங்கள் பதிவு செய்வதற்கான சட்டம் (1955-ன் 12) இதனால் இரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு பொருந்துவது இல்லாமல் ஆவதோ அல்லது இரத்தாக்கப்படவோ செய்யப்பட்ட போதிலும் அத்தகைய சட்டத்தின் கீழ் செய்ததோ செய்ததாக கருதப்படுவதோ ஆன ஏதேனும் காரியமோ எடுத்ததோ எடுத்ததாக கருதப்படுவதோ ஆன ஏதேனும் நடவடிக்கையோ, இந்த சட்டத்தின் கீழ் செய்ததாகவோ எடுத்ததாகவோ கருதப்பட வேண்டும்.

PUBLISHED BY THE SUPERINTENDENT OF GOVERNMENT PRESSES
AT THE GOVERNMENT CENTRAL PRESS, THIRUVANANTHAPURAM, 2026

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

Digitally signed by V JAYAKUMAR
Date:2026.06.09 04:59:47 +05:30